உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-153

ஜனவரி 1-15 2023




## கருங்குரங்காக வந்த அனுமன்

## தீர்ப்பு வழங்கிய நீதிபதி நெகிழ்ச்சி

# திருவண்ணாமலை கோவில் வளர்ச்சி

அக்னித் தலமாக போற்றப்படும் திருவண்ணா மலை திருத்தலம் முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டில் இங்குள்ள மகிழ மரத்தின் அடியில் சுயம்பு லிங்கமாக சிறிய மண் சுவர் குடிலில் வீற்றிருந்தார். நாலாம் நூற்றாண்டில் செங்கல் கட்டிடமாக மாற்றப்பட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் சிறிய ஆலயமாக உருவெடுத்தது.

6,7,8 ஆகிய நூற்றாண்டுகளில் சமயக் குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகியோர் இங்கு வந்து பாடிய போது இது செங் கல் கட்டிடமாகவே இருந் துள்ளது.

9ம் நூற்றாண்டில் சோழ பேரரசு செல்வாக்கு பெற்றிருந்த நேரத்தில்தான் இவ்வாலயம் மாற்றம் பெறத் தொடங்கியது.




அப்போது தான் முதலாம் ஆதித்ய சோழன் இந்த ஆலயத்தை கருங்கல் கருவரையாக மாற்றினான்.

10ம் நூற்றாண்டில் அவனது வாரிசுகள் முதல் மற்றும் 2–ம் பிரகாரங்களை கட்டினார்கள்.

11–ம் நூற்றாண்டிலிருந்து 17–ம் நூற்றாண்டு வரை பல்வேறு கோபுரங்கள் மண்டபங்கள், சந்நிதிகள் என பல்வேறு மன்னர்களால் புனரமைக் கப்பட்ட இந்த ஆலயம் தற்போது 25 ஏக்கர் பரப்பளவு கொண்டு பரந்து விரிந்து காணப் படுகிறது.

# சனிபகவானை வாலில் பிடித்து காலில் கட்டிப்போட்ட அனுமன்

மகாராஷ்டிரா, புல்தானா மாவட்டத்தில் லோனார் ஒரு இடம் உள்ளது,இந்த இடம் விண்கல்லால் உருவான தாகவும் கூறுவார்கள், மேலும் இந்த இடம் காந்த பண்புகளைக் கொண்ட இட மாகவும் கூறப்படுகிறது.




இங்குள்ள ஆலயத்தில் காட்சிதரும் அனுமன் மிக வும் சிறப்பு வாய்ந்தவராக கருதப்படுகிறார்.

சனி தோஷம் உள்ளவர் கள் அவசியம் இந்த அனுமனை தரிசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இதற்கும் ஒரு காரணம் உண்டு.

இங்குள்ள அனுனின் ஒரு கால் தரையிலும், தனது வாலால் சனிபகவானை பிடித்து மற்றொரு காலில் அழுத்தி பிடித்தவாறு அமைந்துள்ளது. சனிபகவானை தனது வாலில் கட்டி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக இங்குள்ள அனுமனை குறிப்பிட்டு சொல்கின்றனர் இவ்வூர் வாசிகள்.

இவரை தரிசிப்பதால், ஏழரை சனி, அஷ்டம சனி, அர்தாஷ்டமசனி போன்றவற்றால் பாதிப்பு குறையும் என்று கூறப்படுகிறது. இவரது வாலில் சனி பகவான் கட்டுண்டு இருப்பதால், இந்த அனுமனை வணங்கும் பக்தர்களுக்கு இடையூறு செய்யமாட்டார் என்று கூறப்படுகிறது.

# தானமும் - தர்மனும்

ஒரு முறை தானத்தில் சிறந்தவன் யார் என்பதில் தர்மனுக்கும், கர்ணனுக்கும் பெரும் போட்டி ஏற்பட்டது.

இது பரமாத்வான கிருஷ்ணனுக்கு தெரியவந்தது.

உடனே இருவரையும் அழைத்தார். இருவருக்கும் இரண்டு மலைகளைத் தந்தார். அந்த மலைகள் முழுக்க முழுக்க தங்கத்தால் ஆனது.

தர்மனையும்,கர்ணனையும் அழைத்த கிருஷ்ணர், தானம் தருவதில் யார் சிறந்தவர் என்பது தெரிய வேண்டுமானால் நீங்கள் இருவரும் இந்தஇரண்டு மலைகளையும் இன்று மாலைக்குள் தானம் தந்து விட வேண்டும் என்றார்.

தர்மர் உடனே களத்தில் இறங்கினார்.

மக்கள் தங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தங்கத்தை வெட்டி எடுத்துக் கொள்ளலாம் என ஊர், நகரம், நாடு முழுக்க, தண்டோரா போடச் சொன்னார்.

லட்சக்கணக்கான மக்கள் குவிந்தனர். மலையை முடிந்த அளவிற்கு வெட்டி தங்கத்தை அள்ளிச் சென்றனர்.

மாலை வந்தது.

தர்மரது மலை பாதிதான்குறைந்திருந்தது.

கிருஷ்ணரைப் பார்க்க தர்மர் அரக்க பரக்க ஓடி வந்தார்.

அங்கே கர்ணன் ஏற்கனவே வந்திருந்தார். கர்ணனைப் பார்த்தால் பரபரப்பின்றிஅமைதியாக இருந்தார்.

தான் நாடு முழுக்க தண்டோரா போட்டு அதனால் லட்சக்கணக்கான மக்கள் குவிந்து தங்கத்தை வெட்டி எடுத்துச் சென்றனர். இவ்வளவு செய்த தன்னாலேயே பாதி மலையைக் தான் தர முடிந்தது. கர்ணனைப் பார்த்தால் எதையும் செய்தது போலத் தெரியவில்லை. அமைதியாக இருக்கிறான். எனவே கர்ணன் போட்டியில் தோற்று விட்டான் போல என்ற எண்ணம் தர்மன் மனதில் உண்டானது.

அதைப் புரிந்து கொண்ட கிருஷ்ணர்,

"தர்மா, போட்டியில் வென்றது கர்ணன் தான். கர்ணன் தான் தானத்தில் சிறந்தவன். நீ லட்சக்கணக்கான மக்களை அழைத்து மலையை வெட்டிக் கொள்ளச் சொன்னாய்.

ஆனால் கர்ணனோ நான் தங்க மலையைத் தந்த அடுத்த கணமே தெருவில் சென்ற ஒருவனை அழைத்து முழு மலையையும் அவனுக்கே தானம் தந்துவிட்டு, இன்னும் ஏதாவது இருக்கிறதா என்று என்னிடம் வந்து விட்டான்.

அதெப்படி முழு மலையையும் ஒருவருக்கே தருவது என்ற எண்ணத்தில் நீ இருந்தாய். ஆனால் கர்ணனோ தானம்கொடுப்பது என்று வந்தபின் எவ்வளவு தந்தால் என்ன என்று நினைத்தான். எனவே கர்ணனே தானத்தில் சிறந்தவன்" என்று கிருஷ்ணர் கூறினார்.



# பாம்பின் தலையில் இடக்கால் வைத்த நடராஜர்



தில்லையில் நடனமாடும் முன்பு இராமநாதபுரம் மாவட்டம் திருஉத்தரகோசமங்கை எனும் தலத்தில் நடராசர் தனிமையில் நடனமாடியதாகப் புராணங்கள் சொல்கின்றன. இத்தலத்தை ஆதி சிதம்பரம் என்றும், இத்தல இறைவன் ஆதிசிதம்பரேசுவரர் என்றும் அழைக்கின்றனர்.

இங்கு நடராஜர் திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்ட மறுநாள் சிதம்பரத்தில் நடராஜர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

உலகிலுள்ள மற்ற சிவாலயங்களில் உள்ள நடராஜர் சிலைகள் அனைத்துமே இவ்விரண்டு மூலவர்களையும் பார்த்து தான் வடிவமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்விரண்டு சிலைகளிலும் கழுத்திலும் இடுப்பிலும் பாம்பு கிடையாது. தலையில் கங்கை கிடையாது. புலித்தோல் உடையும் கிடையாது. இவ்விரண்டு சிலைகளுமே ராஜ தோற்றத்தில் உள்ளன.

பொதுவாக நடராஜர் சிலைகள் அனைத்துமே, வலது காலின் நுனியில் (மதுரை தவிர) முயலகக் குறும்பன் என்னும் அசுரனை நசுக்கிக்கொண்டு காட்சியளிப்பார்.

அதே சமயம் இடக்கால் அந்தரத்தில் தூக்கிய படி நிற்கும். ஆனால், உத்தரகோசமங்கை கோவிலில், நடராஜரின் இடது திருவடியானது பாம்பின் தலைமீது வைத்திருப்பது போல் உருவாக்கப்பட்டுள்ளது வெகு சிறப்பாகும்.

ஆண்டு முழுவதும் சந்தனக்காப்பு இந்த நடராஜர் சிலையை வெளியே கொண்டுவர முடியாது. இச்சிலையை உள்ளேயே வைத்து சந் நிதி கட்டப்பட்டுள்ளது.

அதோடு, நடராஜர் மரகதத்தால் உருவானதால், சிறு சிறு ஒளி, ஒலிகளும் நடராஜர் சிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதாலும், ஆண்டு முழுவதும் அச்சிலையிலிருந்து அதிக அளவில் வெப்பம் வெளிப்படும் என்பதால், ஆண்டு முழுவதும் சந்தனம் பூசி குளிர்ச்சியாகவே வைத்திருப்பார்கள்.

ஆண்டுக்கு ஒரு நாள் மட்டும், அதாவதுசிவபெருமானுக்கு மிகவும் உகந்த நாளான, திருவாதிரை தினத்தன்று மட்டுமே, சந்தனம் களையப்பட்டு அபிஷேகம் நடத்தப்பட்டு, பின்பு மீண்டும் சந்தனத்தால் மூடிவைக்கப்படும்.

இத்தல நடராஜர் சர்பம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்கும் வல்லமை படைத்தவர் என்றும் அறியப்படுகிறது. சர்பம் சம்பந்தப் பிரச்சனை உள்ளவர்கள் இத்தலத்து நடராசனை தொடர்ந்து வணங்கினால் பலன் கிடைக்கும்.

# கர்மயோகி

இறைவனை தனது கர்மாவின் வாயிலாக அடைய விழைபவர்களை கர்மயோகி என்று அழைக்கப்படுவார்கள்.

இவர்கள் தியானம், யோகம், பூஜை, புனஸ்காரத்தை மேற்கொள்ளவில்லையென்றாலும் இறைநிலையுடன் ஒன்றினைந்தவர்களே என்று கீதையின் வாயிலாக கண்ணன் உணர்த்துகிறான்.

அர்ஜுனா...

யார் எந்நிலையிலும் தன் கர்மமே பிராதனமாக கருதி செய்வார்களோ, யார் சொந்தம் பந்தம் எல்லாம் உதறி தன் கர்மத்தை மட்டும் செய்வார்களோ, யார் எந்த பந்தபாச மாயைகளிலும் சிக்காமல் தன் கர்மம் ஒன்றையே தொடர்கிறார்களோ, யார் லாப நஷ்டத்தை பாராமல் பெரும் இழப்பையும் பெரும் புகழையும் தூசுக்கு சமமாக கருதி தன் கர்மத்தை மட்டும் எக்காலமும் எந்நிலையிலும் தவம் போல் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பானோ அவனே "கர்ம யோகி"

எல்லா சூழலிலும் எல்லா காலத்திலும் எந்நெருக்கடியிலும் எந்த இழப்பிலும் பந்தம் பாசம் சொந்தம் பந்தம் விருப்பு வெறுப்பு என எல்லாம் கடந்து தன் கர்மத்தை மட்டும் செய்வானோ அவனே "கர்ம யோகி"

கண்ணும், சொல்லும், மூச்சும், வாக்கும், செயலும் முழுக்க

முழுக்க கர்மத்தில் மட்டும் வைத்து, எந்த மாய மயக்கமும் அதை பாதிக்காதவாறு சூரியன் போல் காற்றுபோல் தன் கர்மாவினை செய்வனே "கர்ம யோகி"

வெயிலும் மழையும், பனியும் குளிரும் , துக்கமும் சந்தோஷமும், மகிழ்வும் அழுகையும் எவனை கட்டுபடுத்தாதோ, கண்ணீரும் மகிழ்ச்சியும் யாரால் வெளிகாட்டாமல் இரண்டையுமே ஒன்றுமில்லாததாக கருதி கடப்பவன் எவனோ அவனே கர்மயோகி.

பூலோகத்தின் எந்த பந்தத்தாலும் எவனை கட்டுபடுத்தமுடியாதோ, உறவையும் பந்தத்தையும் எலும்புகூடாக கருதி கடந்து சென்று கர்மாவினை மட்டும் வைராக்கியமாக செய்வானோ அவனே "கர்ம யோகி" என அறிவாய்.

அவன் கண்ணீர் விடுவதுமில்லை, வெற்றி புன்னகை பூப்பதுமில்லை. எந்த துக்கமும் அந்த மலையினை அசைக்காது எந்த மகிழ்ச்சியும் அந்த கடலை பொங்க வைக்காது, அவன் நிலம்போல் சூரியன் போல் தன் கர்மாவினை செய்துகொண்டே இருப்பான், அவனை அசைப்பார் யாருமில்லை.

என்று கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசமாக கூறுகிறார்.





# மற(றை)ந்து போன அனுபவ மருத்துவம்

- சீயக்காய், தேய்த்து குளிக்க சொன்னது கூந்தல் வளர அல்ல, ஈரு/பேன்/கொசுவை ஒழிக்க!
- தினமும் குளிக்க சொல்வது உடல் சுத்தத்திற்காக அல்ல, கெட்ட ஆவியை (உடல் சூட்டை) தனிக்க!
- பெண்களை மஞ்சள் தேய்த்து குளிக்க சொல்வது! மஞ்சள் ஒரு கிருமி நாசினி, பெண்களின் முகத்தில் எளிதில் தோன்றும் கரும்புள்ளி, முகப்பரு, தோள் வரண்டு கடினமாகுதல் போன்றவையை ஒழிக்கும் திறன் மஞ்சளுக்கு உண்டு... மஞ்சள் ஒரு மிகப்பெரிய மருத்துவம்!
- கர்ப்பிணி பெண்ணின் தலையில் ஒரு கொத்து வேப்பிலையை வைக்க சொல்வது! பேய்/பிசாசு அண்டாமல் இருக்க அல்ல! பொதுவாக சாதாரண பெண்களைவிடகர்ப்பிணி பெண்களின் உடல் சூடு அதிகளவில் வெளிப்படும், வேப்பிலையின் மருத்துவம் அறிந்த நாம் அவற்றை சாமி என்றும் வணங்குகின்றோம்!
- சாணிதெளித்து அரிசி மாவில் கோலம்இடுதல், சாணியை கரைத்து அடுப்பு புடையை பூசுதல், வீட்டு தூண்களில் மஞ்சள் குங்குமம் பூசுதல், வீட்டின் வாசற்படி கொல்லையில் வேப்பமரம், துளசி செடி வைத்தல், கதவு கைப்பிடிகளில் மஞ்சள் கொண்டு பொட்டு வைத்தல்! போன்றவை எல்லாம் சாமி அல்ல. இவையாவும் தமிழரின் அறிவியல் மருத்துவமே. சில படித்த முட்டாள்கள் இவற்றை மூடநம்பிக்கை என்றும் அறிவில் லாத்தனம் என்றும் புறக்கணித்து, ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாய் அலைந்து திரிகிறார்கள்!
- தண்ணீர் அதிகம் குடிக்க சொல்வது தாகம் தீர அல்ல, உடலின் 75% தண்ணீர் இருக்கிறது தண்ணீர் உடலுறுப்புகளை சுத்தம் செய்கிறது, அதிகாலையில் பழைய சோறு நீர் அருந்தும் பழக்கமுடையவர்களுக்கு வயிறு மற்றும் குடல் சம்பந்தப்பட்ட நோய்கள் வரவே வராது ஆயுள் அதிகரிக்கும் என்று வெள்ளைக்காரன் இப்போது விளம்பரம் செய்கிறான்!
- தரையில் சம்மணம் போட்டு சாப்பிட சொல்வது கேவளம் அல்ல...!!! தரையில் அமருவது ஒருவகை யோகாசனம், முது



கெலும்பு நேர்கொண்டு வயிறு விரிய உதவிடும் ஆதலால் நீங்கள் சாப்பிடும் உணவு திகட்டாது உணவின் ருசி மூளைக்கு சென்று அதை நம்மை உணர வைக்கிறது,

- குச்சிப்பாய் / கோரப்பாயில் படுத்துறங்க சொல்வது! பாய் உடல் சூடை உள்வாங்கக் கூடியது, கல்வி கற்கும் சிறு பிள்ளைகள் பாயில் உறங்குவது இளம் வயது கூண் முதுகுவிளாது, கர்ப்பிணி பெண்கள் பாயில் படுத்துறங்குவது இடுப்பு எலும்பு விரிந்து சுயபிரசவத்திற்கு உதவிடுகிறது, ஒரு பாய் மூன்று ஆண்டுகள் வரை அதன் தன்மையை இழக்காது குஷன் பெட், பஞ்சு மெத்தை யாவும் குச்சிப்பாய்கு ஈடாகாது,
- பாத்திரம் கழுவ இலுப்பைத்தூள், அடுப்பு சாம்பல் பயன்படுத்திய காலத்தில்சாக்கடையில் தவளைகள்/தேரைகள் வாழ்ந்தன, வீட்டினுள் தவளை வந்தால் அதை கொல்ல வேண்டாம் பிடித்து வெளியே விட்டுவிடு என பெரியோர்கள் சொல்வார்கள் அது ஏன் தெரியுமா? தவளை மனிதனின் மருத்துவன், ஒரு தவளை ஆயிரக்கணக்கில் உருவாகும் கொசு முட்டைகளை உண்டு மனிதனை காலரா/டெங்கு/காய்ச்சல், போன்ற நோய் நொடிகளிலிருந்து காப்பாற்றும், ஒரு தட்டான்பூச்சி நாள் ஒன்றுக்கு ஆயிரம் கொசு முட்டைகளை தின்றுவிடும் புதர்கள், குட்டை, குளங்கள், காடு, கரைகளை எல்லாம் நாம் ஒழிக்க இப்பொழுது தவளையும் இல்லை; தட்டானும் இல்லை...
- உலகிலேயே மட்டமான சமையல்எண்ணெய் எது தெரியுமா? "சூரியகாந்தி எண்ணெய் தான், டிவி,யில் மணிக்கொரு முறை விளம்பரம் போட்டு நம்மை முட்டாளாக்கி விட்டனர், "சூரியகாந்தி" எண்ணெய்யில் எந்த புரத நார் சத்துக்களும் கிடையாது.
- வயதானவர்களுக்கு வரும் மூட்டு வலிக்கு கடலை / நல்லெண்ணையே ஊர வைத்த வெள்ளை துணியை கொண்டு வலிக்கும் அந்த இடத்தில் கட்டிக்கொள்வார்கள் அது ஏன் தெரியுமா?
- கைக்குழந்தை அதிகமாக அழும்போது அதன் தொப்பிளில் நாளு சொட்டு நல்லெண்ணை விடுவார்கள் அது ஏன் தெரியுமா?
- நெஞ்சு சளி அதிகமாக இருக்கிறது என்றால் கர்பூரத்தை சூடு ஆக்கி வெற்றிலையில் தடவி நெஞ்சில் வைப்பார்கள் அது ஏன் தெரியுமா?

இவையெல்லாம் மருத்துவம் அறிவியல் ரீதியில் நிரூபிக்கப்பட்டவை... சிலர் இவற்றை சாமி என்பார்கள்... அதாவது நல்லது செய்பவை யாவும் சாமி என்று பொருள்.

- இயற்கையை மறந்து செயற்கையாய்கொசு வர்த்தி Allout எனில் வாங்கினாலும், மஞ்சள் காமாலை, காலரா, டெங்குகாய்ச்சல். போன்ற நோய்களை மனிதனைக் கொல்கிறது. முடிந்தவரை இயற்கையான பொருட்களை பயன்படுத்த வேண்டும். நம்மால் இயற்கைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்ற வகையில் செயல்பட வேண்டும். நாம் இயற்கையை அழித்தல் இயற்கை நம்மை அழித்துவிடு...

# முற்பிறவி பலனை இப்பிறவில் தரும் நவகிரகங்கள்



ஒருவர் முற்பிறவியில் செய்த நற்செயல்கள் இந்தப் பிறவியில் நன்மைகளாகவும், முற்பிறவியில் செய்த தீமைகள் இந்தப் பிறவியில் தோஷங்களாகவும், கஷ்ட நஷ்டங்கள் ஆகவும் ஜாதகத்தில் மனிதர்களுக்கு வந்தடைகின்றன.

இந்த நன்மை தீமைகளை நவகிரகங்கள் வாயிலாக மனித வாழ்க்கை முறைகளை தீர்மானிக்கிறது. இதனால் மனிதர்களுக்கு நன்மைகள் மற்றும் தீமைகள் நடக்கின்றன.

முற்பிறவி பயனை இப்பிறவியில் நவகிரகங்கள் மூலம் அனுபவிப்பதை நவகிரக தோஷம் என்றும் கூறலாம், இப்பிறவியில் இறைப் பற்றின் மூலம், நவகிரக தோஷத்தின் வீரியத்தை குறைக்கலாமே தவிர, முற்றிலும் அனுபவிக்காமல் தவிர்க்கமுடியாது.

ஆனாலும் நவதானியத்தை பயன்படுத்திநவகிரகத்தை ஓரளவு சாந்தப்படுத்தலாம், நவகிரகங்கள் தோன்றிய காலத்திலேயே நவ தானியங்களும் தோன்றியது. ஒவ்வொரு தானியமும் ஒவ் வொரு கிரகத்திற்கு உரியதாக திகழ்வதால் அந்த நவதானி யத்தை வைத்துதான் நாம் நவகிரகங்களை சாந்தப்படுத்த வேண்டும்.

மேலும் நமது உடலும் மற்றும் மனதின் எண்ண ஓட்டமும் நவக்கிரகங்களால் ஆளப்படுகின்றன. ஒவ்வொரு கிரகமும் உடலின் ஒவ்வொரு பகுதியில் தங்களது சேவையைச் செய்கின்றன. அதா

வது இதை தான் சக்கர சுழற்சி என்கிறோம்.

## நவகிரகங்கள்

| | |
|---|---|
| சூரியன் | தந்தை (ஆத்மா, எலும்பு) |
| சந்திரன் | தாய் (மனம், இரத்தம்) |
| செவ்வாய் ராகு | சகோதரர்கள் (பலம், மஜ்ஜை) |
| புதன் | தாய்மாமன் (வாக்கு, தோல்) |
| குரு | புத்திரக்காரன் (ஞானம், தசை) |
| சுக்கிரன் | களத்திரக்காரகன் (காமம், இந்திரியம்) |
| சனி, கேது | ஆயுள் (துக்கம், நரம்புத் தசை) |

ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு யோகத்தை தரவல்லது, இவர்களை வழிபாட்டின் மூலம் குளிர்வித்தாலும், செய்யும் செயலை நல்லது கலந்திருந்தாலும், நவகிரகங்களின் மனம் குளிரும். அவ்வாரு ஒரு ஜாதகத்தில் ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு யோகத்தை தரும்போது, அந்த ஜாதகர் குறிப்பிட்ட யோகாதிபதியாக விளங்குவார்கள்.

## நவகிரகங்கள் தரும் யோகங்கள்

| | |
|---|---|
| சூரியன் | ஆரோக்கியம் |
| சந்திரன் | புகழ் |
| செவ்வாய் | செல்வச் செழிப்பு |
| புதன் | அறிவு வளர்ச்சி |
| வியாழன் | மதிப்பு |
| சுக்கிரன் | வசீகரத் தன்மை |
| சனீஸ்வரன் | மகிழ்வான வாழ்க்கை |
| ராகு | தைரியம் |
| கேது | பாரம்பரியப் பெருமை |

மேற்கண்ட யோகங்களை ஒவ்வொரு கிரகங்களுக்கு உரியது, ஒருவருடைய ஜாதகத்திற்கேற்ப மேற்கண்ட யோகங்கள் அமையும், இந்த யோகங்கள் சென்ற ஜென்மத்தில் நன்மை செய்தவர்களுக்கு இப்பிறவில் பரிசாக இயற்கையாகவே நவகிரகங்களால் கொடுக்கப்படும் பரிசு.

நவகிரகங்களைப் சுற்றி வழிபடும் போது அந்தந்த கிரகத்திற்கும் உரித்தான எண்ணிக்கையில் சுற்றி வழிபட வேண்டும்.

அதாவது முதலில் ஒன்பது முறை சுற்றி வணங்கிய பின் அந்தக் கிரக அனுக்கிரகத் துக்காக மேலும் விசேஷமாகச் சுற்றி வந்து வழிபடுதல் வேண்டும்.



## எத்தனை சுற்றுகள்

| | |
|---|---|
| சூரியன் | 10 சுற்றுகள் |
| சுக்கிரன் | 6 சுற்றுகள் |
| சந்திரன் | 11 சுற்றுகள் |
| சனி | 8 சுற்றுகள் |
| செவ்வாய் | 9 சுற்றுகள் |
| இராகு | 4 சுற்றுகள் அடிப்பிரதட்சிணம் |
| புதன் | 5, 12, 23 சுற்றுகள் |
| கேது | 9 சுற்றுகள் |
| வியாழன் | 3, 12, 21 சுற்றுகள் |

குறிப்பு:

இப்பிறவில் இவை அனைத்தும் கிடைக்க இதை செய்ய வேண்டும், அதை செய்ய வேண்டும் என்று ஒருசில போலி ஜோதிடர்கள்,தங்கள் வருமானத்தை பெருக்க பல்வேறு வழிமுறைகளை கூறுவார்கள். எக்காரணம் கொண்டும் நவகிரகங்களை குறுக்கு வழியில் அனுக முடியாது, முடிந்த வரை நன்மைகள் செய்து, மனதார இறை வழிபாடு செய்தால்தான் நவகிரகங்கள் மேற்கண்ட யோகங்களை அருளும்.

முடிந்த அளவு நாம்செய்யும் அனைத்து செயலையும் நன்மையாகவே செய்யப் பழகுவோம், தீய செயலை செய்து அதற்கு பரிகாரம் செய்வதை விட நல்ல செயலைத் தொடர்ந்து செய்தால் இப்பிறவி மட்டுமல்ல அடுத்த ஏழு பிறவிக்கும் நம் வாழ்வில் நன்மையையே தருவார்கள் நவ கிரகங்கள்.

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில்

புத்தகத்தில் (e-book)

வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**150** க்கும் மேற்பட்ட

இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில்

இலவசமாக

படிக்கலாம்.

# பல நோய்களை வெல்லும்

# வெந்நீர்

18ம் நூற்றாண்டிலிருந்து நாகரீக வளர்ச்சி என்ற போர்வையில் மக்கள் பல்வேறு பிரச்சனைகளை, உடல் அளவிலும் மனதளவிலும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆடம்பர வாழ்க்கை, இயற்கைக்கு மாறான சொகுசான வாழ்க்கை முறை, வயிற்றுக்கு பாதகத்தையும், நாவிற்கு சுவையை மட்டும் தரும், குப்பைக்கு சமமான உணவு பழக்கங்கள், போன்றவற்றால் பல்வேறு பிரச்சனைகளுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சாப்பாடு சாப்பிடும் அளவிற்கு மருந்து, மாத்திரைகளையும் எடுத்துக் கொள்கின்றனர்.

இயற்கையிலிருந்து நழுவிய வாழ்க்கையின் பரிசாகவே நாம் இந்த வாழ்க்கை முறையை ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

ஆனாலும், ஒருசில அன்றாட பழக்கவழக்கங்களில் சில மாற்றங்களை செய்தால், தற்கால உடல், மனப் பிரச்சனைகளிலிருந்து ஓரளவு சமாளித்துக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கும்.

அந்த வகையில் வெந்நீர் குடிக்கும் பழக்கம் ஒருசிலவகையில், நமக்கு நன்மை தருவதாகவே அமைகிறது.

தினமும் காலை இரண்டு டம்ளர் வெந்நீர் குடிப்பதால், பழைய என்ஸைம்கள் வெளியேற்றப்பட்டு, புது அமிலங்கள் உற்பத்தியாகின்றன.



அன்றைய தினம் முழுக்க செரிமான மண்டலம் திறனுடன் வேலை செய்ய இது உதவுகிறது.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்களுக்குவெந்நீர் ஒரு அருமருந்து. மலச்சிக்கல் ஏற்படு வதற்கு முக்கியக் காரணம் அதிகமான கழிவுப் பொருட்கள், நம் குடலில் தங்குவதுதான். இத னால், வயிற்று வலி, உப்புசம் முதலானவை உண்டாகி தொந்தரவு செய்யும். வெந்நீர் அருந்தும் போது, அது உணவுப் பொருட்களை எளிதில் செரிமானம் செய்து, வெளியேற்ற உதவுகிறது.

மேலும், வெந்நீர் அருந்துவதால் நரம்புசம்பந் தப்பட்ட நோய்கள் குணமாகும். உயர் ரத்தஅழுத் தம், கீழ் வாதம், மன அழுத்தம் போன்றவைகட்டுப் படும். உணவு மண்டலம், சிறுநீரகம் தொடர்புடைய நோய்கள் குணமாகும். சுவாச மண்டலம், நுரை யீரல், இதயம், மூளை போன்றவற்றில் உள்ள கோளாறுகள் சரியாகும்.

சுக்கு கலந்த வெந்நீரை அடிக்கடிக் குடித்து வந்தால் வாயுத் தொல்லை வராது அஜீரணத்தால் ஏற்படும் தலைவலி தடைப்படும். வயிற்றுப் புண் ணினால் ஏற்படும் வலியைக் குறைக்க மித மான சூடான வெந்நீரைச் சிறிது சிறிதாகக் குடிப்பது நல்லது.

நல்ல பலமான விருந்து சாப்பிட்ட பிறகு வெந்நீரைக் குடித்தால் சாப்பிட்ட விருந்தானது எளிதில் ஜீரணமாகி விடும்.

ஜப்பானில் இந்த வெந்நீர் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் மருத்துவத்துறையில் பயன்படுத்து கின்றனர்.

ஜப்பானிய மருத்துவர்களின் குழு, வெது வெதுப்பான நீர் சில உடல்நலப் பிரச்சினை களைத் தீர்ப்பதில் 100% பயனுள்ளதாக இருப்பதை உறுதிப்படுத்தியது:

| | |
|---|---|
| 1. | ஒற்றைத் தலைவலி |
| 2. | உயர் இரத்த அழுத்தம் |
| 3. | குறைந்த இரத்த அழுத்தம் |
| 4. | மூட்டு வலி |
| 5. | இதயத்துடிப்பின் திடீர் அதிகரிப்பு மற்றும் குறைவு |
| 6. | கால்கை வலிப்பு |
| 7. | கொலஸ்ட்ரால் அளவு அதிகரிக்கும் |
| 8. | இருமல் |
| 9. | உடல் அசௌகரியம் |
| 10. | கோலு வலி |
| 11. | ஆஸ்துமா |
| 12. | வளைய இருமல் |
| 13. | நரம்புகள் அடைப்பு |
| 14. | கருப்பை மற்றும் சிறுநீர் தொடர்பான நோய் |
| 15. | வயிற்றுப் பிரச்சனைகள் |
| 16. | மோசமான பசியின்மை |
| 17. | மேலும் கண்கள், காது மற்றும் தொண்டை தொடர்பான அனைத்து நோய்களும். |
| 18. | தலைவலி |



மேற்கண்ட பிரச்சனைகளை தீர்ப்பதாக கூறி யுள்ளது. ஜப்பானிய மக்களும் இந்த வெந்நீர் பழக்கத்தைக் கடைபிடித்து வருகின்றனர்.

## சூடு நீரை பயன்படுத்துவது எப்படி

அதிகாலையில் எழுந்து, வயிறு காலியாக இருக் கும்போது தோராயமாக 2 டம்ளர் வெதுவெதுப்பான தண்ணீரைக் குடியுங்கள். ஆரம்பத்தில் 2 டம்ளர் குடிப்பது கடினமாக இருக்கும், அதனால் 1 டம்ளர்

வெந்நீர் குடிப்பதிலிருந்து துவங்கலாம். தண்ணீர் எடுத்த 45 நிமிடங்களுக்கு எதையும் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

## பலன் கிடைக்கும் நாள்களும், தீரும் நோய்களும்

| | |
|---|---|
| 3 நாட்களில் | மைக்ரேன் / தலைவலி |
| 10 நாட்களில் | கருப்பை மற்றும் தொடர்புடைய நோய்கள் |
| 10 நாட்களில் | மூக்கு, காது மற்றும் தொண்டை பிரச்சனைகள் |
| 10 நாட்களில் | வயிற்று பிரச்சனைகள் |
| 10 நாட்களில் | பசியின்மை |
| 15 நாட்களில் | பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் |
| 30 நாட்களில் | இதய நோய்கள் |
| 30 நாட்களில் | சர்க்கரை நோய் |
| 30 நாட்களில் | இரத்த அழுத்தம் |
| 4 மாதங்களில் | கொலஸ்ட்ரால் |
| 4 மாதங்களில் | ஆஸ்துமா |
| 6 மாதங்களில் | நரம்புகள் அடைப்பு |
| 9 மாதங்களில் | அனைத்து வகையான புற்று நோய்களும் |
| 9 மாதங்களில் | கால்கை வலிப்பு மற்றும் பக்கவாதம் |

முடிந்த அளவு குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தும் நீரையும், குளிர் பானங்களையும் தவிருங்கள், நமது உடல் குளிர்ச்சியான நீரை யும், பானங்களையும் ஏற்றுக் கொண்டாலும், உடலுக்குள் இருக்கும் பல்வேறு பாகங்கள் அவற் றை ஏற்காது.

உடலுக்குள் இருக்கும் பாகங்கள் மிகவும் மென்மையானவை இவற்றுக்குள் குளிர்ந்த பானங் களோ, நீரோ செல்லும்போது, தனது அன்றாட செயல்பாட்டிலிருந்து மாறும் சூழ் நிலைக்கு உடல் பாகங்கள் தள்ளப்படுகிறது.

ஒருசில சமயங்களில் அவை செயல்படுவதற்கு தடுமாறுவதால் அதை ஒரு பிரச்சனையாக வெளிக்காட்ட ஆரம்பிக்கும். இருமல், தும்மல், அலர்ஜி, சைனஸ் போன்ற அறிகுறிகளாக அவை வெளிக்காட்ட ஆரம்பிக்கும்.

தற்போது ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் முதற்கொண்டு, பெரியவர்கள் வரை குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தும் நீரை அருந்துவதை ஒரு பேஷனாக கடைபிடிக்கின்றனர்.

உடலில் உள்ள செல்கள் மிகுந்த வீரியத்துடன் செயல்படும் போது, நாம் அருந்தும் குளிர்ந்த நீரால் ஏற்படும் விளைவுகளை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கும், அதே அந்த செல்களுக்கு வீரியம் குறையும் போது, ஒவ்வொரு பிரச்சனைகளாக வெளிக்காட்ட ஆரம்பிக்கும்.

## குளிர்ந்த நீரால் வரும் பிரச்சனை

- இளமையில் குளிர்ந்த நீர் உங்களைத் தாக்கவில்லை என்றால், முதுமையில் அது உங்களைத் தாக்கும்.
- குளிர்ந்த நீர் இதயத்தின் 4 நரம்புகளை மூடி, மாரடைப்பை ஏற்படுத்துகிறது. மார டைப்புக்கு முக்கிய காரணம்.
- கல்லீரலில் பிரச்சனைகளையும் உருவாக்கு கிறது. இது கொழுப்பை கல்லீரலில் சிக்க வைக்கிறது. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் பெரும் பாலானோர் குளிர்ந்த நீரை குடித்து பலி யாகின்றனர்.
- குளிர்ந்த நீர் வயிற்றின் உள் சுவர்களை பாதிக்கிறது. இது பெரிய குடலைப் பாதி த்து புற்றுநோயை உண்டாக்குகிறது.




ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

150 இதழ்களையும்

இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...

Scan to Read-
aanmeegamalar
E-magazine

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மீக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# வாலாஜாபேட்டை ஸ்ரீதன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் புத்தாண்டு, வைகுண்ட ஏகாதசி சிறப்பு தரிசனங்கள்





வாலாஜாபேட்டை அடுத்த கீழ்புதுப்பேட்டையில் உள்ள ஸ்ரீதன்வந்திரி ஆரோக்ய பீடத்தில்,ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர்.ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, ஜனவரி 1ம் தேதி ஆங்கிலபுத்தாண்டை முன்னிட்டு சிறப்பு பூஜை, ஹோமங்கள், தொடர் அன்னபிரசாதம் வழங்கப்பட்டது.

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஸ்ரீ தன் வந்திரி ஆரோக்ய பீடத்தில் காலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு, மங்கல வாத்தியத்துடன் கோபூஜை உள்பட சிறப்பு பூஜைகளும், சிறப்பு அலங்காரத்தில் மூலவர் ஸ்ரீ தன்வந்திரி பெருமாளுக்கு பூஜைகளும் நடைபெற்றது.

மேலும் சிறப்பு ஹோமங்களுடன், காலை முதல் இரவு வரை பக்தர்களுக்கு தொடர் அன்னப் பிரசாதமும், ஔஷதமும் வழங்கப்பட்டது.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஆயிரக் கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று மூலவர் தன்வந்திரி பெருமாளையும் மற்ற 89 பரிவார தெய்வங்களையும் வழிபட்டு , பிரசாதமும், பீடாதிபதி ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளிடம் ஆசியும் பெற்று சென்றனர்.

இது தவிர ஓம் சக்தி மாலை அணிந்து கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த திரளான பக்தர்களும் ஸ்வாமி தரிசனம் செய்து சென்றனர்.

புத்தாண்டு தினத்தை ஒட்டி தன்வந்திரி பீடத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக மருத்துவ வசதி மையம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஏராளமான பக்தர்கள் உடல் பரிசோதனைகள் செய்து கொண்டனர். மேலும் தீ தடுப்பிற்காக தீயணைப்பு வாகனம், போலீஸ் பாதுகாப்பு உள்பட பாதுகாப்பு வசதிகளும் செய்யப்பட்டிருந்தது.

முன்னதாக, இந்திய நாட்டின் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தாயார் ஹீரா பென் மோடி 30ம்தேதி இயற்கை எய்தினார். மறைந்த திருமதி. ஹீரா பென் மோடி அவர்களின் ஆன்மா சாந்தி அடையவும், முக்தி பெறவும், அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பவும் வேண்டி, ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர்.ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் தலைமையில், 31ம்தேதி சனிக்கிழமை காலை சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

தொடர்ந்து 2ம்தேதி திங்கள்கிழமை காலை 5.30 மணிக்கு, ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு வைபவம் நடைபெறுகிறது.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# கிழமைகளும், அதற்குரிய கிரகங்களும், பயன்படுத்த வேண்டிய வண்ணங்களும்

## திங்கள்: (சந்திரன்)

திங்கட்கிழமைகளில் சிவாலய தரிசனம் நன்மை தரும். தேவாரம், திருவாசகம், அபிராமி அந்தாதி பாடல்களைக் கொண்டு அம்பிகையையும், சிவ பெருமானையும் வழிபடுவது நல்லது. இதனால் வாழ்வில் அந்தஸ்து உண்டாகும்.

வெள்ளை நிறத்துடன் தொடர்புடையது திங்கள் சந்திரனைக் குறிக்கும் சொல் என்பதால் அதன் வெள்ளை நிறம் அனைத்திலும் சிறந்ததைக் குறிக்கிறது. எனவே வெள்ளை நிற உடைகளை அணிவது நல்ல அதிர்ஷ்டத்தை தரும்.

இந்த உடைகள் வெள்ளை நிற நகைகள் அதாவது முத்து, வைரம் ஆகியவற்றினையும் குறிக்கும். இன்று சந்திரனை வழிபட வேண்டும்.

## செவ்வாய்: (செவ்வாய்)

செவ்வாய் கிழமைகளில் சுப்ரமணியஸ்வாமி ஆலயத்தில் ஆறு விளக்குகள் ஏற்றி வழிபடுவ தால் நினைத்தது நடக்கும். எதிரிகள் காணாமல் போவார்கள். கந்தசஷ்டி கவசம் படிப்பதும் நன் மை தரும்.

சிவப்பைச் சார்ந்த நிறங்களைக் குறிக்கும் சிவப்பு வண்ண உடைகளையும், சிவப்புக்கல் அல்லது பவளம் ஆகிய நகைகளையும் அணிந்து செவ்வாய் கிரகத்தினை வழிபட வேண்டும்

## புதன்:

பெருமாளை வணங்குவது நல்லது. இந்நாளில் துளசிமாடத்திற்கு பூஜை செய்ய உகந்த நாளாகும். விஷ்ணு ஸஹஸ்ரநாமம், நாலாயிர திவ்யபிரபந்த பாடல்களைப் படிப்பதும் நன்மை தரும். மேலும், இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைக்கும்.

பசுமையைக் குறிக்கும் புதன்கிழமையில் பச்சை நிறம் முக்கியத்துவம் பெறுகிறது. பச்சை நிற உடைகள், மரகதம் உள்ளிட்ட பச்சை நிறக் கற்கள் ஆகியவற்றை அணியலாம். இன்று புதன் கிரகத்தினை வழிபட வேண்டும்.

## வியாழன்:(குரு)

வியாழக்கிழமை நாம் குருவாக எண்ணும் மகான்களைப் போற்றுவதற்கு உகந்த நாள். சாயிபாபா, ராகவேந்திரர், ராமானுஜர், காஞ்சி பரமாச்சார்யாள் போன்ற மகான்களை ஆரா தனை செய்ய உகந்த நாள். இந்த நாளில் பகவத் கீதையைப் பொருள் புரிந்து படித்தால் கல்வி மேன்மை பெருகும்.

வியாழக்கிழமைகளில் மஞ்சள் நகைகள் மற்றும் தங்க நிற உடைகளை அணிவது மங்கள கரமாக இருக்கும். இன்று நவக்கிரக குருவை வழிபட வேண்டும்.

## வெள்ளிக்கிழமை: (சுக்கிரன்)

வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி வழிபாடு நன்மை தரும். கோ பூஜை செய்வது, பஞ்சமுக குத்துவிளக்கினை ஏற்றி வைத்து பூஜிப்பது மிகவும் விசேஷம். அம்பிகையின் ஆலயங்களை தரிசிப்பது நன்மை தரும். மேலும் மஹாலட்சுமி ஸ்தோத்ரம், மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம், அன்னபூர்ணா அஷ்டகம் ஆகியவற்றைப் படித் தால் வெகு சுலபத்தில் நாம் எடுக்கும் வேலையில் வெற்றி கிட்டும்.

வெள்ளிக்கிழமைகளில் இளம்சிவப்பு நிறத்தை தேர்வு செய்யுங்கள். இந்த பிங்க் நிறத்தில் உடைகள், மாணிக்கம் உள்ளிட்ட சிவப்பு நிறக் கற்களை கொண்ட நகைகள் ஆகியவற்றை அணியலாம். இன்று சுக்கிரனை வழிபட வேண்டும்.

## சனிக்கிழமை: (சனி)

சனிக்கிழமை ஆஞ்சநேயர், கருடாழ்வார், நந்திகேஸ்வரர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என இறைவனுக்குத் தொண்டு செய்து இறைநிலை அடைந்த அடியவர்களை வணங்குவதற்கு உகந்தநாள். ராமாயணம், மகாபாரதம், சுந்தரகாண்டம், பெரியபுராணம் முதலான நூல்களைப் படித்தறிதலுக்கு உகந்த நாள். இதனால் உடலில் உள்ள நோய்கள் தீரும்.

சனிக்கிழமை கருப்பு நிறம் சிறந்தது. அதேப்போல் நீலம், ஊதா மற்றும் வாடாமல்லி நிறங்களையும் அணியலாம். நீலக்கல் உள்ளிட்ட இந்த நிறங்களை ஒத்த கற்களைக் கொண்ட நகைகளையும் அணியலாம். இன்று சனிக்கிரகத்தை வழிபட வேண்டும்.

## ஞாயிற்றுக்கிழமை: (சூரியன்)

கண்ணுக்குத் தெரிந்த கடவுளான சூரியனை வணங்குவது சிறந்தது. ஆதித்ய ஹ்ருதயம் ஸ்லோகம் சொல்லி வணங்குவது இன்னும் சிறப்பானது. இதனால் நம்மை அறியாமல் செய்த பாவங்கள் ஒழியும்.

சூரியனுக்குரிய நிறங்கள் இந்த நாளில் சூரியனை ஒத்த நிறங்கள் சிறந்தவை. ஆரஞ்சு நிறம் எதிரிகளை விலக்க வல்லது மற்றும் உடனடியாக பலன் தர வல்லது.

விஷம் உள்ளிட்ட ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு அளிக்க வல்லது. எனவே அன்று ஆரஞ்சு நிற உடைகள் மற்றும் நகைகளை அணிவது பொருத்தமானதாக இருக்கும். இன்று சூரிய கிரகத்தை வழிபட வேண்டும்.

குறிப்பாக சூரியனால் வணங்கப்பட்ட சிவ ஆலயங்களுக்கு சென்று வழிபட்டால் அதித பலன் கிடைக்கும்.



ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# விவேகானந்தரின் ராஜயோக விளக்கங்கள்

**ப்ரவ்ருத்திபேதே ப்ரயோஜகம் சித்தமேகமனே கேஷாம்**

வெவ்வேறு நிர்மாண சித்தங்களின் செயல்பாடுகள் வெவ்வேறாக இருந்தாலும், யோகியின் மூல சித்தமே அவற்றை எல்லாம் அடக்கி ஆள்கிறது.

பல்வேறு உடல்களில் செயல்படுகின்ற வெவ்வேறான இந்தச் சித்தங்கள் நிர்மாண சித்தங்கள் எனவும், இந்த உடல்கள் நிர்மாண காயங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன; அதாவது படைக்கப்பட்ட சித்தங்கள் மற்றும் படைக்கப்பட்ட உடல்கள். ஜடப் பொருளும் மனமும் வற்றாத இருகளஞ்சியங்கள்நீங்கள் யோகிகளாகும்போது அவற்றை அடக்கி ஆளும் ரகசியத்தை அறிந்து கொள்ளலாம்.

அது எப்போதும் உங்களுடையதாகவே இருந்தது. நீங்கள் அதை மறந்துவிட்டீர்கள். யோகியானதும் நினைவிற்குக் கொண்டு வருகிறீர்கள். அதன்பின் அவற்றை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். விரும்பியவாறு பயன்படுத்தலாம். அண்டம் எந்தப் பொருளால் ஆக்கப்பட்டுள்ளதோ அந்தப் பொருளாலேயே, படைக்கப்பட்ட சித்தங்கள் ஆக்கப்பட்டுள்ளன. மனம் ஒரு பொருள், ஜடம் வேறு பொருள் என்று சொல்வதற்கில்லை. அவை ஒரே பொருளின் வேறுபட்ட நிலைகள்தான். யோகியின் நிர்மாண சித்தங்களும், நிர்மாண காயங்களும் ஸத்தின் சூட்சும நிலை அதாவது அஸ்மிதை அதாவது நான் உணர்வினாலேயே ஆக்கப்பட்டுள்ளது. எனவே இயற்கையிலுள்ள இந்தச் சக்திகளின் ரகசியத்தை யோகி அறிந்தால், அஸ்மிதையிலிருந்து அவன் பல சித்தங்களையும் உடல்களையும் படைத்துக் கொள்வான்.



**தத்ர த்யானஜமனாசயம்**

பல்வேறு சித்தங்களுள் சமாதியின் மூலம் அடைந்த சித்தமே ஆசையற்றது.

வெவ்வேறு மனிதர்களிடம் நாம் காணும் வெவ்வேறு சித்தங்களுள் பூரண ஒருமைப்பாட்டுநிலையை, சமாதி நிலையை அடைந்த சித்தமே மிக உயர்ந்தது.

மருந்து, மந்திரம், தவம் இவற்றால் சித்திகளைப் பெற்றவனுக்கு ஆசைகள் உண்டு. ஆனால் தியானத்தின் மூலம் சமாதி நிலை அடைந் தவனுடைய சித்தம் மட்டுமே ஆசைகள் அற்றது.

### கர்மாசுக்லாக்ருஷ்ணம் யோகிநஸ்த்ரிவிதமித ரேஷாம்

யோகிகளுக்குச் செயல்கள் வெளுத்திருப்பது மில்லை. கறுத்திருப்பதில்லை. மற்றவர்களுக்கு அவை வெளுத்தவை. கறுத்தவை, இரண்டும் கலந்தவை என்று மூவகைகளில் உண்டு. யோகி பூரண நிலையை அடைந்த பிறகு, அவனுடைய செயல்களும் அவற்றின் பலன்களும் அவனுக்குத் தளைகளை உண்டாக்காது. ஏனெனில் அவன் ஆசையால் தூண்டப் பெற்று அந்தச் செயல் களைச் செய்யவில்லை. அவன் செயல் புரிந்து கொண்டே போகிறான். நன்மை செய்ய விரும்புகிறான். அதனால் செயல்புரிகிறான்.

பலனைப்பற்றி எண்ணாததால் அவை அவனிடம் வருவதில்லை. அந்த உயர் நிலையை அடையாத சாதாரண மனிதனிடம் காணப்படும் செயல்கள் கறுப்பு(தீய செயல்), வெளுப்பு(நற்செயல்) இவற் றின் கலப்பு என மூவகைப்படும்.

### ததஸ்தத்விபாகானு குணானாமேவாபி வ்யக்திர் வாஸனானாம்

இந்த மூவகைச் செயல்களிலி ருந்து ஒவ்வொரு நிலையிலும் அந்த நிலைக்குப் பொருத் தமான ஆசை மட்டும் வெளிப்படும் (மற்றவை அந்த வேளைக்கு அடங்கி இருக்கும்)

நன்மை, தீமை, கலப்பு, ஆகிய மூவ கைச் செயல் களை



நான் செய்ததாக வைத்துக் கொள்வோம், நான் இறந்து சொர்க்கத்தில் தேவன் ஆகிறேன். அங்கே தேவ உடலில் இருக்கும்போது எழும் விருப்பங்கள், மனித உடலில் இருக்கும்போது எழும் விருப்பங்களைப்போல் இருக்காது.

தேவ உடலுக்கு உணவும் பானமும் வேண்டிய தில்லை உண்பது, பருகுவது போன்ற ஆசைகளை எழுப்புவதான எனது கடந்த கால கர்மங்கள், நான் அனுபவித்து முடிக்காத அந்தக் கர்மங்கள் அப்போது என்னவாகும்?

நான் தேவனாகும்போது இந்தக் கர்மங்கள் எங்கே போகும்? இந்த விருப்பங்கள் அவற்றிற் குத் தகுந்த சூழ்நிலையில் மட்டும்தான் வெளிப் படும் என்பதே இதற்கு விடை. சூழ்நிலைக்குப் பொருத்தமான விருப்பங் கள் மட்டுமே வெளிப் படும்.

எஞ்சியவை சேர்த்து வைக்கப்படும். இந்த வாழ்க்கையில் நமக்குத் தேவ ஆசைகளும்,மனித ஆசைகளும், விலங்கு ஆசைகளும் இருக்கலாம். தேவனின் உடலை எடுத்தால் நல்ல ஆசைகள் மட்டும் வெளிப்படும், சூழ் நிலை அந்த விருப்பங் களுக்கே பொருத்தமாக உள்ளது. விலங்கின் உடலை எடுக் கும்போது விலங்கின் விருப்பங்கள் வெளிப்பட்டுத் தோன்றும்.

அப்போது நல்ல விருப்பங்கள் காத்திருக்கும் வேண்டும். இது எதைக் காட்டுகிறது? சூழ்நிலையின் துணையி னால் நாம் இந்த ஆசை களை அடக்க முடியும் என்பதைத்தான். கர்மத்தையேகூட அடக்கு வதற்கானவலிமை மிக்க ஒரு கருவி சூழ்நிலை என்ப தையே இது காட்டுகிறது.


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

# சங்கடங்கள் தரும் சனிபகவானும் எளிய பரிகாரமும்



நவகிரகங்களில் எந்த ஒரு கிரகத்துக்கும் இல்லாத ஒரு சிறப்பு சனிக்கு உண்டு. சனிபகவான் பூமியைச் சுற்றி வருவதற்கு 30 வருடங்களாகும். ஒரு லக்னத்திலிருந்து இன்னொரு லக்னத்துக்குச் செல்ல அதிக காலம் எடுத்துக்கொள்ளும் ஒரே கிரகம் சனியே. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி ஆகியவற்றின் வழியாக வாழ்க்கையின் அனுபவத்தையும் புரிதலையும் செய்யக்கூடியவர்தான் சனிபகவான்.

நாம் செய்யும் தவறுகளுக்குத் தண்டனை தந்து நம்மை நல்வழிப்படுத்துபவர் சனி பகவான்தான். வேகமாகச் செல்லும் நம் வாழ்க்கைச் சக்கரத்தைத் தடுத்து நிறுத்தி, நாம் எதற்காக இந்த பூமிக்கு வந்தோம், நம் இலக்கு எது என்பதை நமக்கு உணரவைப்பவர்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

எல்லோரும் ஏழரைச் சனியைக்கண்டுதான் அதிகம் பயப்படுகிறார்கள். உண்மையில் அஷ்டம சனிதான் ஒருவருக்கு அவமானங்களையும் அலைச்சல் திரிச்சலையும் தேடித்தரும்.

வாழ்க்கையின் எந்தவிதமான பிரச்னையையும் எதிர்கொள்வதற்குரிய துணிச்சலையும், இயல் பாகக் கையாள்வதற்குரிய அனுபவத்தையும் தருவாரே தவிர சனி பகவான் எந்த ஒரு சூழ் நிலையிலும் ஒரு மனிதனைக் கீழே போகச் செய்யமாட்டார்.

சித்தர்கள், பாசாங்கற்ற உண்மையான ஆன்மிக வாதிகள், கடைநிலை ஊழியர்கள், தொண்டர்கள், சமூக சேவகர்கள், பொதுத்துறை நிறுவனங்களின் வழியாக மக்கள் சேவை செய்பவர்களுக்கு சனி பகவான்தான் காரண கர்த்தாவாக திகழ்வார். சனியின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் பாசாங்கு செய்யாமல் உண்மையாக உழைக்கக் கூடியவர்கள்.

மந்தன், மகேசன், ரவிபுத்ரன், நொண்டி,

முடவன், ஜடாதரன், ஆயுள் காரகன் என பல பெயர்களில் அழைக்கப்படும் சனி சூரியனின் மகனாவார். பொதுவாக தந்தைக்கும் மகனுக்கும் ஒற்றுமை இருக்கும். ஆனால் சூரியனும் சனியும் ஜென்ம பகைவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை வருடம் தங்கும் கிரகம் சனியாவார். இவர் ராசி மண்டலத்தை ஒரு முறை சுற்றிவர 30 வருடங்கள் ஆகிறது. சனியின் ஆட்சி வீடு மகரம், கும்பம். உச்ச வீடு துலாம். நீச வீடு மேஷம். பகை வீடு சிம்மம்.

சனிக்கு நட்பு கிரகங்கள் புதன், சுக்கிரன், ராகு, கேது, சமகிரகம் குரு. பகை கிரகம் சூரியன், சந்திரன், செவ்வாய். பூசம், அனுஷம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு சனி அதிபதியாவார். சனி திசை 19 வருடங்களாகும். சனி ஆண்கிரகமும் இல்லாமல் பெண் கிரகமாகாவும் இல்லாமல் அலியாக இருக்கிறார்.

சனியின் வாகனம் காக்கை, எருமை. பாஷை அன்னிய பாஷைகள், உலோகம் இரும்பு, வஸ்திரம் கறுப்பு பூ போட்டது, நிறம் கருமை, திசை மேற்கு, தேவதை யமன், சாஸ்தா, சமித்து வன்னி, தானியம் எள்ளு, புஷ்பம் கருங் குவளை, சுவை கசப்பு ஆகும்.

சனி பகவான் ஸ்தோத்திரப்பிரியர். சனி தோஷம் நீங்க, சனிக் கிழமைகள் தோறும் விரதமிருந்து, சனி பகவான் சந்நதியில் இரண்டு அகல் விளக்குகளில் நல்லெண் ணெய் ஊற்றி தீபமிட்டு, எள்ளன்னம் நைவேத்யம் படைத்து, மனமுருக, சனி கவசம், சனிஸ்வர அஷ்டோத்ரம் பாராயணம் செய்திடலாம்.

முடிந்தவரை ஏழைகளுக்கு எள்ளன்னம், கருப்பு வஸ்திரங்களை தட்சணையுடன் தானம் தரலாம். சனி பகவானை நேருக்குநேர் வணங்காமல் பக்கவாட்டில்




நின்றவாறு வணங்க வேண்டும்.

இவ்வழிபாட்டை திருநள்ளாறு சென்று நள தீர்த்தத்தில் நீராடி செய்வது மிகச்சிறந்த பலன்களை தரும். திருநள்ளாற்று தர்பாரண்யேஸ்வரரையும், அம்பாளையும், சனி பகவானையும் வழிபடுவது சனி தோஷம் தீர்க்கும்.

காக்கைக்கு தினந்தோறும் அன்னம் இடுவதும், உளுந்து தானியத்தை தானம் செய்வதும், கோவில்களில் நவக்கிரகங்களை 9 முறை வலம் வந்து வணங்குவதும், நீலக் கல் அணிந்த மோதிரத்தை அணிந்து கொள்வதும், சனிக்கிழமை அதிகாலை வேளைகளில் சுந்தர காண்டம் பாராயணம் செய்வதும் ஏழரைச் சனியின் தோஷம் குறைக்கும்.



சனி தோஷத்தினால் துன்பங்கள் அதிக மாகும் நேரங்களில், கருப்பு தோல் அகற்றாத முழு உளுந்து தானியத்தை 108 என்ற எண்ணிக்கையில், இரவு தலையணை அடியில் வைத்து உறங்கி, பின்னர் காலையில் எழுந்து நீராடி, சனி பகவானை 108 முறை வலம் வந்து, ஒவ்வொரு வலம் முடிந்தவுடனும் ஒரு உளுந்தை தரையில் இட வேண்டும். உளுந்து தானியம் தானம் சனி பகானின் நல்லாசி கிடைத்திட அருளும்.

# 2023 ஜனவரி மாத பலன்கள்




மதுரை
மடப்புரம் விலக்கு
ஜோதிடர்
கரு. கருப்பையா
M. A. M. PHIL
PH: 95247 51504
94431 65504.


## மேஷம்



பேசும் போது எதிலும்எச்ச ரிக்கை தேவை, பேச்சில் பொறு மையை கடைபிடிக்க வும்.பணி காரணமாக குடும்பத் தைவிட்டு தற்காலிகமாக சிலர் பிரிந்திருக்க வாய்ப்புண்டு. வியாபாரிகள், தொழில் கூட்டாளிகள் புதிய திட்டங்களை சிறுது காலத்திற்கு தள்ளிப்போடுவது நல்லது. நாள்பட்ட உடல் உபாதைகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

பரிகாரம்: விநாயகர் தஷிணாமூர்த்தி வழிபாடு நற்பலனை தரும்.

## ரிஷபம்



பிடிவாதத்தை தளர்த்தி விட்டுகொடுத்துசெல்வது பின்னாளில்பலனளிக்கும். சிலருக்குஅலுவல் ரீதியான பயணங்கள் உண்டாகலாம். வெளிநாட்டில் வேலை தேடும் பிள்ளைகளுக்கு உரிய வேலை கிடைக்கும். பணியிடத்தில் சிலருக்குகுழப்ப மான மனநிலை தோன்றினும் அது தேவையற்ற கவலையே..

பரிகாரம்: தினமும் துர்க்கை அம்மனை வழிபடுங்கள் நன்மை ஏற்படும்.

## மிதுனம்



பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும்.அரசு, அரசுசார்ந்த பணிகளுக்காக அலைச்சல்உண்டாகி பின்னர் அனுகூலமாக முடியும். துணைவழி,பெற்றோர் வழியில் சில செலவுகள் உண்டாகலாம். தொழில் முறை பயணங்கள் சிலருக்கு உண்டாகும். சீருடை பணி யாளர்கள் ஆதாயம் அடைவர்.

பரிகாரம்: முருகன் விநாயகர், வழிபாடு பிரச்சனைகளை தீர்க்கும்.

## கடகம்



வீட்டில் திருமணம், சுபநிகழ்ச்சி கள் நடைபெறும் காலம்கூடிவரும். திருமணம் சம்பந்தமான பயணங்களும் சிலருக்கு உண்டாகும். சுப விரையம், சுபமானச் செலவு கள் உண்டு. பிள்ளைகளின் தேவைக் காக சிலருக்கு கடன்கள் உண்டாகலாம்.

பரிகாரம்: ஆஞ்சநேயர், லட்சுமி வழிபாடு நன்மை தரும்.

## சிம்மம்



தொழில், வாக்கு, குடும்ப நிலை சுமாராக இருக்கும். வேலை, பணிகளில் தடை தாமதம் உண்டாகலாம். ஆன்மிக ஈடுபாடு, கோயில்வழி பாடு, தாய்வழி உறவுகளின் சந்திப்பு உண்டாகும். வீடு, வாகன, சுக சௌகரிய பொருட்களின் சேர்க்கை மற்றும் செலவுகள் உண்டு.

பரிகாரம்: துர்க்கை, கால பைரவர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கன்னி

ஒருமுறைக்கு பல முறை யோசித்து புதிய கடன்களை வாங்கவும். உறவுகளிடம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.



வழக்கத்திற்கு மாறாக, தனிமை, அமைதியை விரும்புவீர்கள் மனதில் ஒரு வெறுமை போன்ற உணர்வுகள்தோன்றி மறையும். திருத்தல யாத்திரை, ஆன்மீக விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். படிப்பதில் ஈடுபாடு உண்டாகும். வெளிநாட்டில் வேலைக்கு முயற்சிப்போருக்கு வேலை கிடைக்கும்.

பரிகாரம்: அம்மன், விநாயர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## துலாம்



வேலைக்கு செல்பவர்கள், பணியாளர்கள்உரிய ஆதாயம் அடைவர். தனவரவுக்கு குறைவிருக்காது. தொழில், வாக்கு, குடும்ப நிலை சிறக்கும். சகோதர வகையில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் அதற்கான பயணங்கள் உண்டாகும். பிள்ளைகளுக்கு படிப்பில் நாட்டம் குறையாமல் இருக்க திங்கள் கிழமைகளில் சிவாலய வழிபாடு உதவும்..

பரிகாரம்: விநாயகர் தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## விருச்சிகம்



மூத்தோரின் ஆசிகள் உண்டு. நிதி, நிர்வாகம், வங்கி,மேலாண்மை,எழுத்து, ஆன்மீகம் போன்ற துறைகளை சார்ந்தவர்கள் பயனடைவர். வேலை தேடிக்கொண்டிருப்பவர் களுக்கு உரிய வேலை கிடைக்கும்.

சீருடை பணி யாளர், தொழிலாளர்கள் நிலை மேம்படும். தாயாரின் உதவி, தந்தை வழி உறவுகளின் வருகை உண்டாகும்..

பரிகாரம்: அனுமன் வழிபாடு நன்மை தரும்.

## தனுசு



அரசு வழி காரியங்கள்அனுகூலமாகும். வழக்கு,விஷயங்களில்வெற்றி கிட்டும். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு அனுகூலமான சூழ்நிலை நிலவும். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலை சீராகும். பேச்சில் இனிமை கூடும். வீட்டிற்கு தேவையான சில ஆடம்பர பொருட்களின் சேர்க்கை உண்டாகும்..

பரிகாரம்: அம்மன், முருகன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மகரம்

தொழில், வாக்கு, பணியாளர் நிலைசிறக்கும். சில மன கவலைகள்வந்துபோகும்.



வண்டி, வாகனம், வீடுசம்பந்தபட்ட சரிபார்ப்புசெலவுகள் உண்டு. குழந்தைகள் உற்சாகமாக செயல்படுவார்கள். பெரியோரின் ஆசிகள் கிட்டும். சுப விரையங்கள், சுப தேவைகளுக்கான கடன்கள் சிலருக்கு உண்டாகும். துணையுடன் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். நீண்டகால பூமி, பணம் சம்பந்தப்பட்ட ஆசைகள் ஈடேறும்.

பரிகாரம்: சத்ய நாராயணர், காமாட்சி வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கும்பம்

சிறு சிறு மருத்துவ செலவுகள் உண்டாகும். ஆன்மீக காரியங்களுக்கு சிறு செலவுசெய்வ தால் அனாவசிய தன விரையத்தை தவிர்க் கலாம். நிதி, நிர்வாகம், வங்கி, ஆன்மிகம்



சம்பந்தப்பட்ட தொழில்களில் இருப்பவர்கள் ஏற்றம் அடைவர். குலதெய்வபிரார்த் தனைகளை நிறைவேற்றுவீர்கள். அரசு, அரசு துறை சம்பந்தப்பட்ட காரியங்கள் சுலபமாக முடியும். வண்டி வாகனம் குறித்த நீண்டநாள் ஆசைகள் ஈடேறும்.

பரிகாரம்: பெருமாள், முருகர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மீனம்

பிள்ளைகளால் நன்மையடைவீர்கள். வீட்டில் சில தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள். பெரியோர்களின் சந்திப்பு உண்டாகும்.



குழந்தைகளின் படிப்பில் மாத பிற்பகுதியில் முன்னேற்றம் உண்டாகும். அரசு சம்பந்தப்பட்ட சில வரி, போன்ற செலவுகள் உண்டாகலாம். வியாபாரிகள் கடன் விற்பனையை தவிர்ப்பது அல்லது குறைப்பது நல்லது. துணையின் மூலம் பொருளாதார அனுகூலங்கள் உண்டாகும்.

பரிகாரம்: சிவன், விநாயகர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

# குழந்தைகள் திருஷ்டியை போக்கும்

# ஜவ்வாது

நல்ல நறுமணங்களில் லட்சுமி வாசம் செய்வதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. கோயில்களில் ஜவ்வாது பயன்படுத்தும் போது இறையாற்றல் அதிகரித்துக் காணப்படு கின்றன. அதையே நமது வீடுகளிலும், பூஜை அறைகளிலும் பயன் படுத்தும் போது கடவுள் லட்சுமியின் அம்சம் நமது இல்லங்களுக்கும் கிடைக்கிறது. இதனால் வீடுகளில் செழிப்பு உண்டாகும், இன்பம் அதி கரிக்கும்.

இன்று பலரும் தங்களுடைய உடம்பிலும், உடைகளிலும் வாசனைக்காக செயற்கை திரவி யங்களை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறோம். ஆனால் முந்தைய காலக்கட்டத்தில் நம்முடைய முன்னோர்கள் பலர் ஜவ்வாது பொடியை வாசனை திரவிய மாக பயன்படுத்தி வந்தனர்.

தெய்வீக பொருட்களி லும், வாசனைதிரவியம் ஆகவும் பயன்படும் ஜவ்வாது, விசேஷ சக்தி களை கொண்டுள்ளது. சாதாரணமாக மலரும் மலர்களின் வாசமும் ஒரு மனிதனை அமைதியான மனநிலைக்கு கொண்டு செல்கிறது. அவ்வகையில் ஜவ்வாது அதையும் தாண்டி மனதிற்கு புத்துணர்ச்சியை கொடுக்க வல்லது என்றால் அது மிகையாகாது.

சந்தனக் கட்டை, ஒருசில மூலிகைகள் மற்றும் நறுமணம் கொண்ட மலர்கள் வைத்து ஜவ்வாது தயாரிக்கப்படுகிறது.

கோயில்களில் மூலவர் தெய்வங்களுக்கு ஜவ்வாது பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மூலவர் வாயிலாக பக்தர்களுக்கு கிடைக்கும் இறையாற்றல் அதிகரிப்பதாக நம்பப்படுகிறது. அதுதான் நேர்மறையான ஆற்றலாக பக்தர் களுக்கு கிடைக்கிறது.

ஜவ்வாது கோயில்களில் பயன்படுத்துவதால் வெறும் நறுமணம் சூழ்வது மட்டுமில்லாமல், துஷ்ட சக்திகளும் விலகி நிற்கின் றன.

புனுகுடன் சேர்ந்து ஜவ்வாதுபயன் படுத்துவதால், தெய்வீகம் கோயில் முழுக்க நிறைந்திருக்கும். அந்த வகையில், இதை வீடுகளி லும் பயன்படுத்தும் போது வீடு முழுக்க தெய்வீகம் நிறைந்திருக்கும். வாசனை திரவியத்துக்கு பதிலாக, தனிநபர்களும் ஜவ்வாது



ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்

பயன்படுத்தலாம். அப்படி செய்யும் போது, நம்மையும் துஷ்ட சக்திகள் அண்டாது.

நாட்டு மருந்து கடைகளில் இன்றும் ஜவ்வாது விற்பனை செய்யப்படுகிறது. இது பேஸ்டு வடிவிலும் பொடியாகவும் கிடைக்கிறது. அதை வாங்கி வந்து, உங்கள் வீடுகளில் இருக்கும் சாமிப் படங்கள் மீது தடவலாம்.

பேஸ்ட்டாக கிடைத்தால், தண்ணீரில் கலந்து பூஜை அறையில் தெளிக்கலாம். அதேபோன்று சந்தனப் பொட்டு வைக்கும் போது, அதில் சிறிதளவு ஜவ்வாது கலக்கலாம். அப்போது சந்தனப் பொட்டு வைக்கும் போது, நம்மைச் சுற்றி நறுமணம் கமழும்.

கோயில்களில் கடவுளுக்கு வழங்கப்படும் அர்ச்சனை தட்டில் தேங்காய், பூ, வாழைப் பழத்துடன் ஜவ்வாது டப்பாவையும் வழங்கலாம்.

சிவன் கோயில்களுக்கு பூஜைப் பொருட்களுடன் ஜவ்வாது கொடுக்கலாம். தொடர்ந்து ஒன்பது வாரம் இப்படிச் செய்தால் தொழில் வளர்ச்சி அடையும், வியாபாரம் மந்தமாக இருந்தால் சூடு பிடிக்கும்.

அதேபோன்று சிவன் கோயில்களில் இருக்கும் கால பைரவருக்கும் ஜவ்வாது கொண்டு பூஜை செய்யலாம். இதனால் வேலைவாய்ப்பை வேண்டுவோர், புதிய வேலை வாய்ப்பை பெற விரும்புவோருக்கு பலன் கிடைக்கும்.

குழந்தைகள் பயன்படுத்தும் உடைகளின் ஓரத்தில் சிறிதளவு ஜவ்வாதை தேய்த்துவிடலாம். இதனால் கண் திருஷ்டி குழந்தைகள் மீது விழாது, அவர்களை துஷ்ட சக்திகள் அண்டாது. மேலும் குழந்தைகளைச் சுற்றி நேர்மறையான எண்ணங்கள் உருவாகும்.

இதனால் குழந்தைகளின் எதிர்காலம் மிகவும் பாதுகாப்பானதாக இருக்கும். இறையாற்றல் அதிகளவில் குழந்தைகளுக்கு கிடைக்கும். மன உளைச்சல் மன இறுக்கம் போன்ற நிலைக்கு உட்பெற்றவர்களும் அதில் இருந்து வெளியேறுவதற்கு ஜவ்வாதுவை பயன்படுத்தலாம்.

# துன்பமில்லாத அமைதி மரணத்திற்கு ஆதிசங்கரர் அருளிய ஸ்லோகம்

**அநாயாசேன மரணம் விநா தைன்யேன ஜீவனம் தேஹிமே
க்ருபையா சம்போ த்வயி பக்திம் அசஞ்சலம்**

**அமைதியான மரணம் நிகழ, இந்த ஸ்லோகத்தை ஆதிசங்கரர் எழுதியுள்ளார், இதை அவசியம் அனைவரும் பாராயணம் செய்யுங்கள் என்று பெரியவர் பரமாச்சாரியார் கூறியுள்ளார்.**



**இந்த ஸ்லோகத்தின் அர்த்தம்.**

**"சம்போ மகாதேவா, அப்பா எனக்கு தேஹ உபாதை இல்லாத சிரமப்படாத, யாரையும் படுத்தாமல், எவருக்கும் துன்பமில்லாமல், உன்னை நன்றி கலந்த பக்தியோடு நினைத்துக் கொண்டே இந்த உலகை விட்டு பறக்கும் மரணத்தை கொடுப்பாயா?"**

- **'பரமேஸ்வரா நான் கேட்பது மூன்றுவரம். ஒன்று: கஷ்டமே இல்லாத வலி இல் லாத சுக மரணம்.**
- **ரெண்டாவது: நான் எதற்கும், எவரிட மும், கையேந்தி தஞ்சமடையாமல் சுதந் திரமாக வாழ்ந்து மறையவேண்டும்.**
- **அப்பனே, கடைசியாக மூன்றாவது வரம் என்ன தெரியுமா? என்னை நீ விடவே கூடாது என் கடைசி நிமிஷத்தில் நீ என்னோடு இருந்து நான் உன்னை அடைய உதவ வேண்டும்."**

# சிவனுக்கு மட்டுமல்ல முச்சந்தி விநாயகருக்கும் மூன்று கண் உண்டு

கணேச பகவானின் உருவம் இந்த பிரபஞ்சம் போல மிக பிரம்மாண்டமானது. அவ்வளவு பெரிய திருவுருவத்தின் வாகனமாக சின்னஞ்சிறிய மூஞ்சூறு அமைந்துள்ளது நமக்கு விந்தையாக இருக்கும். இந்து மத கடவுளின் திருவுருவங்களை பற்றி கேலி பேசுபவர்கள் எந்த காலத்திலாவது ஆணை ஒன்று எலியின் மீது பயணம் செய்ய முடியுமா? என்றுகிண்டலாக கேட்பார்கள் அவர்களுக்கு இந்த உருவங்களின் உண்மை தத்துவம் என்னவென்று அறிந்து கொள்ளும் மனபக்குவம் இல்லை. எலி என்பது மனிதனுக்குள்ள கீழான இயல்பை காட்டுவதாகும். அந்த கீழான இயல்பை அடக்கி அதன் மேல் உட்கார்ந்து இருக்கும் இறைவனான விநாயகர் மனிதனுக்குள் மறைந்திருக்கும் பரமாத்மா சக்தியை காட்டுவதாகவும்.

**கடவுள் உருவாக்கிய மதம்**

மேலும் கையில் உள்ள மோதகம் என்ற கொழுக்கட்டை ஆத்மாக்களை காக்கும் பொறுப்பையும் இன்னொரு கையில் உள்ள தந்தம் உயிர்களுக்கு வரும் இடையூறுகளை தடுக்கும் பொறுப்பையும் மற்றொரு கையில் உள்ள நீர் கலசம் மனித உயிர்களை பீடிக்கும் மாயையை அகற்றும் பொறுப்பையும். வேறொரு கையில் உள்ள பாச கயிறும் அங்குசமும் ஆத்மாக்களை தீங்குகள் அணுகாமல் காத்து நிற்கும் பொறுப்பையும் கொண்டுள்ளதாக சமய சான்றோர்கள் சொல்வார்கள். இதுமட்டுமல்லாது ஐங்கர பெருமானின் ஐந்து திருகரங்களும்



மூலமுதற் கடவுளின் முக்கியதொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய இறை பண்புகளை காட்டுவதாகவும் அனுபுதிமான்கள் பேசுகிறார்கள்.

முக்கண் இறைவன் என்று அழைக்கப்படுவது சிவபெருமான் ஒருவரை தான் ஆனால் மூன்று கண்கள் உடைய இறைவன் அவர் மட்டுமல்ல முச்சந்தியில் அமர்ந்திருக்கும் விநாயகருக்கும் மூன்று கண்கள் உண்டு இந்த மூன்று கண்கள் முறையே சூரியனையும் சந்திரனையும் அக்னியையும் நினைவுபடுத்திறது என்றாலும் சிவபெருமான் வேறு யாருமல்ல நானே அவரும் அவரே நானும் என்று நமக்கு உணர்த்தாமல் உணர்த்தவே மூன்று கண்களை கணபதி கொண்டு காட்சி தருகிறார். அதாவது கங்கை சடை உடையானை தனியாக வணங்க வேண்டியது இல்லை கணபதி ஒருவனை வணங் கினாலே போதும் என்பது இதன் அர்த்தமாகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

பிள்ளையாரின் உருவத்தில் மட்டும் தத்துவம் மறைந்தில்லை அவருக்கு மிக பிடித்தமானது என்று பக்தர்களால் படைக்கப்படும்பொருள் களில் கூட தத்துவங்கள் மறைந்துள்ளன. மிக குறிப்பாக சொல்வது என்றால் பிள்ளையார் சதுர்த்தி அன்று நாம் படைக்கும் கொழுகட்டையை எடுத்து கொள்வோம். அது எள், வெல்லம் போன்ற வற்றால் செய்யப்படும் ஒரு சாதாரண இனிப்பு பண்டம் தான் ஆனால் அதனுள் இருக்கின்ற எள் என்ற கருப்பு தானியம் உலக பற்றை ஆசையை குறிப்பதாகும். அந்த ஆசையை தியாகம் செய்தால் மறுமை இன்பமாகிய வெல்லம் என்ற இனிப்பு கிடைக்கும் என்பதே மோதக படையலின் உண்மை தத்துவம் ஆகும்.

கணபதியின் உருவமும் கணபதியின் படையலும் மட்டுமா தத்துவங்களை சுமந்து நிற்கிறது. அவரது திருநாமங்கள் கூட ஆயிரமாயிரம்தத்துவ ஞானத்தை நமக்கு காட்டுகிறது. உதாரணமாக கணபதி என்ற நாமத்தில் உள்ள க என்ற முதலெழுத்து மனிதனின் மனதையும் வாக்கையும் குறிப்பதாகும். ண என்ற இரண்டாவது எழுத்து கடந்த நிலை என்ற பொருளை தரும். பதி என்பது தலைவனை சுட்டி காட்டும் வார்த்தையாகும். ஆக மனம், வாக்கு ஆகியவைகளை கடந்த நிலையில் பதியாகிய இறைவன் இருக்கிறான் என்பதே கணபதி என்ற திருநாமத்தின் ஆதரசுருதி யாகும். அதே போன்று வக்ரதுண்ட என்ற திருநாமம் கொடிய மாயை களை ஒடித்து போடுபவர் என்ற பொருளை தரும். லம்ப உதரர் அதாவது லம்போதரர் என்ற திருநாமம் சாதாரண மனித புலன் களுக்கு அகப்படாத பிரபஞ்ச வெளியை தனக்குள் கொண்டவர் என்ற பொருளை தரும்.

பொதுவாக கணபதியை பிரம்மசாரியாகவே நாம் அறிவோம் அதனால் அவர் சன்யாசிகளுக்கு உரிய தெய்வம் இல்லறத்தார்களுக்கு கணபதி யின் அருள் கிடைப்பது துர்பலம் என்று சிலர் நினைக்கிறார்கள் அது மிகவும் தவறு கணபதி என்ற மூலமுதற் பொருளில் எந்த அளவு பிரம்மசரிய தன்மை உள்ளதோ அந்த அளவு இல்லறதன்மையும் இருக்கிறது. இதை தெளி வாக நமக்கு காட்ட சக்தியை தனது மடியின் மேல் வைத்து கொண்ட நிலையில் வல்லப கணபதியாக நமக்கு காட்சி தருகிறார். இதன் பொருள் நான் காட்டுக்கு சென்று கடுந்தவம் செய்யும் முனிவன் மட்டுமல்ல அன்னையை தாங்கும் நல்ல பிள்ளையுமாகவும் இருக்கிறேன் என்பதாகும். அதே போலவே சித்தி,புத்தி என்ற இரண்டு தேவி மார்கள் விநாயகரின் நாயகிகளாக இருப்பதை விநாயக புராணம் நமக்கு தெளிவாக காட்டுகிறது. அது மட்டுமல்ல ஷேமம்,லாபம் இரண்டு புத்திரர்கள் கணபதிக்கு உண்டு என்று அந்த புராணம் நமக்கு தெளிவு படவே சொல்லுகிறது. அதாவது இதன் பொருள் என்னவென்றால் சித்தி என்பது வெற்றியையும் புத்தி என்பது அறிவையும் குறிப்பதாகும். வெற்றியும் அறிவும் எங்கு இருக்கிறதோ அங்கே சுகம் என்ற ஷேமமும்,லாபமும் இயற்கையாகவே இருக்கும் அல்லவா? இது தான் விநாயக பெருமானின் கல்யாண திருகோலத்தின் தெளிவான விளக்கமாகும்.




யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# ஆன்மிமலர்.காம் சார்பில் வெளியிடப்பட்ட 2023-ஆம் ஆண்டு காலண்டர் சிறப்பாக பல்வேறு இடங்களில் வெளியிடப்பட்டது



மதுரை ஆதினம் அவர்கள் வெளியிட்டபோது...



காசி விஸ்வநாதர் கோவிலில் வெளியிடப்பட்டு அன்னபூரணி சன்னதி அருகே மக்களுக்கு விநியோகப்பட்டது.



உலகெங்கிலும் பல நூறு கோவில் கும்பாபிஷேகம் செய்துவைத்த திருச்சி பிச்சை குருக்கள் வெளியிட்டபோது



சதாசிவ பரப்பிரம்ம சிவனடியார் திருக்கூட்டத்தின் நிறுவனர், ஐயா சிவ தாமோதரன் அய்யா அவர்கள் வெளியிட்டபோது.



திருப்போரூர் செம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள
ஸ்ரீபீடம் ஸ்ரீபாலா சமஸ்தானம் சார்பில் வெளியிடப்பட்டது.



புளியங்குடி ஸ்ரீ ஆவணிஅம்மன் கோவில்களில்
காலண்டர் வெளியிடப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.



மானாமதுரை அருகே கட்டிக்குளம் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் கோவிலில்
வெளியிடப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்ட ஆன்மிக காலண்டர்.



மானாமதுரை அருகே கட்டிக்குளம் சூட்டுக்கோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுக்கம் கருப்பனேந்தல் மடத்தில்வெளியிடப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்ட காரலண்டர்.



மதுரை மடப்புரம் காளியம்மன் கோவிலில் ஜோதிடர் திருப்புவனம் கரு.கருப்பையா, ஆன்மிககாலண்டரை வெளியிட்டார்.





மானா மதுரை சீனியப்பா குரூப்ஸ் தலைமையில் வெளியிடப்பட்டது.





மானா மதுரை அகிலா டிம்பர்ஸ் அதிபர் திரு.லெ.சுரேஷ் வெளியிட்டார்.



நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகர், ஸ்ரீகார்த்திகேயா கோவிலில் ஆன்மிகமலர்.காம் காலண்டர் வெளியிடப்பட்டது.





ஆதிசங்கர சேவா சமாஜம்நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கிழக்கு தில்லியில் உள்ள இஷ்ட சித்தி விநாயகர் கோவிலில், ஆன்மிகமலர் காலண்டர் வெளியிடப்பட்டது.



கிழக்கு தில்லியில் உள்ள ஸ்ரீ கனேஷ் மந்திர் அசோசியேஷன் சார்பில் ஸ்ரீ வரத விநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பட்ட காலண்டர்.





மானா மதுரையில் உள்ள ஸ்ரீ சுந்தரவிநாயகர் கோவிலில் வெளியிடப்பட்டது.



மானா மதுரை தாயமங்கலம் ரோட்டில் உள்ள ஸ்ரீவைகரை அய்யனார் அலங்கார குளம் சேனையா கோவிலில் அறங்காவலர் திரு.காளீஸ்வரன் காலண்டர்களை வழங்கினார்..

# 2023-ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை கிரிவல காலண்டர்

| நாள் | கிழமை | ஆரம்ப நேரம் | முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| 06.01.2023 | வெள்ளிக்கிழமை | 02.57 AM, Jan 06 | 04.54 PM, Jan 07 |
| 05.02.2023 | ஞாற்றுக்கிழமை | 10.41 PM, Feb 04 | 12.48 AM, Feb 06 |
| 07.03.2023 | செவ்வாய்க்கிழமை | 05.39 PM, Mar 06 | 07.14 PM, Mar 07 |
| 05.04.2023 | புதன்கிழமை | 10.17 AM, Apr 05 | 10.58 AM, Apr 06 |
| 05.05.2023 | வெள்ளிக்கிழமை | 11.59 PM, May 04 | 11.33 PM, May 05 |
| 03.06.2023 | சனிக்கிழமை | 10.54 AM, Jun 03 | 09.34 AM, Jun 04 |
| 03.07.2023 | திங்கட்கிழமை | 07.46 PM, Jul 02 | 05.49 PM, Jul 03 |
| 01.08.2023 | செவ்வாய்க்கிழமை | 03.26 AM, Aug 01 | 01.05 AM, Aug 02 |
| 29.09.2023 | வெள்ளிக்கிழமை | 06.47 PM, Sep 28 | 04.34 PM, Sep 29 |
| 28.10.2023 | சனிக்கிழமை | 04.01 AM, Oct 28 | 02.27 AM, Oct 29 |
| 27.11.2023 | திங்கட்கிழமை | 03.58 PM, Nov 26 | 03.07 PM, Nov 27 |
| 26.12.2023 | செவ்வாய்க்கிழமை | 05.56 AM, Dec 26 | 06.07 AM, Dec 27 |

www.aanmeegamalar.com

# பாபர் மசூதி வழக்கும் கருங்குரங்காக வந்த அனுமனும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி நெகிழ்ச்சி பேட்டி

பாபர் மசூதிக்குள் 1949ல் ஹிந்து பக்தர்களின் வழிபாட்டுக்குத் திறந்து விடும் உத்தரவை 1986ல் பிறப்பித்த பைஸாபாத் மாவட்ட நீதிபதி கே.எம்.பாண்டே, பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின், 1991–ல் தனது சுய சரிதையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

பூட்டியிருந்த கோயிலின் கதவை பக்தர்களின் தரிசனத்துக்குத் திறந்து விடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்த அந்த நாளன்று, எனது நீதிமன்ற அறையின் மேற்கூரையில் கொடிமரத்தைப் பற்றியபடி ஒரு கருப்புக் குரங்கு அமர்ந்திருந்தது.

அன்றைய தினம் தீர்ப்பு என்ன? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த பைஸாபாத், அயோத்தி நகரங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் குரங்குக்கு வேர்க்கடலை, பழம் முதலான வற்றைக் கொடுத்தனர். "அந்தக் குரங்கோ அவற்றைத் தொடக்கூட இல்லை. மாலை 4.40க்கு நான் தீர்ப்பைப் படித்தவுடன் அந்தக் குரங்கு அங்கிருந்து அகன்றது. பின்னர் எனது பாதுகாப்புக்காக வந்திருந்த மாவட்ட ஆட்சியரும் போலீஸ் கண்காணிப்பாளரும் என்னை எனது பங்களாவுக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு பார்த்தால், எனது பங்களாவின் தாழ்வாரத்தில் அதே குரங்கு அமர்ந்திருக்கிறது. எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. நிச்சயமாக ஒரு தெய்வீக சக்திதான் அந்த குரங்கு என்பதை உணர்ந்து கொண்டு அதனை வணங்கினேன்.”

"அயோத்தி ராமன்
அனைவருக்கும் இனியவன்".
என்ற கட்டுரை
சுஜாதா தேசிகன் எழுதியது
(‘வலம்’ நவம்பர் 2017 இதழில்)

www.aanmeegamalar.com

## திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அகஸ்த்தீஸ்வரர் கோவில்

# ஸ்ரீ அகத்தியர் மகா சித்தர் குரு பூஜை விழா





அப்பர் பெருமான் ஆறாம் திருமுறையில் திருத்தாண்டகத்தில் பாடிய *தேவாரம் வைப்புத் தலமான விராடபுரம் எனும் புராண பெயர் கொண்ட தாராபுரம் அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அகஸ்த்தீஸ்வரர் கோவிலில் உலகத்தின் முதல் இலக்கிய நூலான அகத்தியம் நூலை இயற்றிய பதினென் சித்தர்களில் தலையாய சித்தராக விளங்கிவரும் அகத்திய மகா சித்தருக்கு குருபூசை விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

கயிலை மலையில் நடைபெற்ற பரமேஸ்வரன் பரமேஸ்வரி திருமணத்தின் போதும் உலகில் உள்ள அத்துனை தெய்வங்களும், தேவர்களும், சித்தர்களும், யோகிகளும், பூதகணங்களும் அதிகமாக கூடியதால் பாரம் தாங்காமல் கைலாய மலை தாழ்ந்து தென்னாடு உயர்ந்ததால் அதனை சமன்படுத்தும் பொருட்டு பொதிகை மலை நோக்கி தென்னாடு வந்த அகத்திய மகா சித்தர் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அமராவதி ஆற்றில் குளித்த பின்னர் சிவபூஜை செய்திட ஆற்று மணலை லிங்கமாக பிடித்து பூசை புனஸ்காரம் செய்து வழிபட்டார்.

அன்று அகத்தியர் வழிபட்ட அந்த லிங்கம் இன்று வரை பல யுகங்களாக அபிஷேகம் நடைபெற்று வந்தும் சிறிதும் கரையாமல் மூலவராக காட்சி கொடுத்து அருள்பாலித்து வருவது மிகவும் அதிசயமாக உள்ளது.

பொதுவாக மணல் லிங்கத்திற்கு எங்கும் அபிஷேகம் நடைபெறுவது இல்லை ஆனால் தாராபுரம் அகத்தீஸ்வரர் கோவில் உள்ள மூலவருக்கு அனுதினமும் அபிஷேக ஆராதனை நடைபெற்று வருகின்றது.

இக்கோவிலில் வரும் ஜனவரி 9ம் தேதி திங்கள் கிழமை (மார்கழி மாதம் ஆயில்யம் நட்சத்திரம்) அன்று மாலை 4.30 மணியளவில் இக்கோவிலில் உள்ள ஸ்ரீ அகத்திய மகா சித்தர் திருமேனிக்கு 16 வகை அபிஷேகம் ஆராதனையுடன் சிறப்பாக குரு பூஜை விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவில் அனைவரும் கலந்து கொண்டு சித்தரின் அருள் ஆசி பெற விழாக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

மேலும் தகவலுக்கு,

திரு இளங்கோவன் (முன்னால் தாராபுரம் நகராட்சி சுகாதார அலுவலர்) 98425 22464

திரு சிவக்குமார் (தாராபுரம் LIC கார்பரேசன் ஆப் இந்தியா முகவர்) 94429 22654

திரு விஸ்வ ரத்தினம் (ஒட்டன்சத்திரம்) 9362686060.

# ஆன்மீக வழியில் அமைதி

57

உலகில் காணும் பொருள்களைப் பார்ப்பவன் வேறு. பார்க்கப்படும் பொருள் வேறு. அறிபவன் வேறு. அறியப்படும் பொருள் வேறு. அதேபோல் அனுபவிக்கும் பொருள் வேறு. அதனை அனுபவிப்பவன் வேறு. அறிபவனிலிருந்து அறியப்படும் பொருள் வேறாகத்தான் இருக்க முடியும். ஆத்மா என்பது அறிபவன். அனாத்மா என்பது பொருளைப் பற்றி அறிவது ஆகும். உலகில் நமது அனுபவத்தில் இந்த ஸ்தூல உடலை என்னுடையது என்று சொல்கிறோம்.

மூன்று சரீரங்களின் மூலம் வருகின்ற அனுபவத்தை வைத்து இந்த உடலை என்னுடையது என்று கூறுகிறோம். இந்த உடல் என்பது நான் அல்ல. நமது அறியாமையால் இந்த ஸ்தூல உடலை நான் என்று எண்ணிக்கொண்டு 'நான்' அல்லது என்னுடையது என்று கூறுகிறோம். எடுத்துக்காட்டாக நாம் அணியும் ஆபரணங்கள், படிக்கும் புத்தகங்கள் போன்றவற்றை நாம் பயன்படுத்துவதால் என்னுடையது என்று கூறுகிறோம். அப்பொருள்களை 'நான்' என்று கூறுவதில்லை. அதாவது நான் புத்தகம் நான் ஆபரணம் என்று கூற மாட்டோம். இதிலிருந்து அனுபவவிக்கும் பொருள்கள் எல்லாம் 'நான்' அல்ல என்று தெரிந்து கொள்ளலாம்.

மூன்று சரீரங்களுக்கும் மூன்று அவஸ்தைகளுக்கும் பஞ்ச கோசங்களுக்கும் அப்பாற்பட்டது ஆத்மா. நாம் ஸ்தூல உடலை என்னுடையது என்று வெளியே காணப்படும் பொருள்களை குறிப்பிடுவதுபோல் என்னுடைய உடல் என்று அறியாமையால் கூறிக்கொண்டு இருக்கிறோம். மூன்று சரீரங்கள் மூன்று அவஸ்தைகள் அனுபவத்திற்கு வருவதால் அவைகள் என்னுடையது அல்ல.

மருத்துவரிடம் சென்று கால் நடக்க முடியாமல் வலிக்கிறது என்றுதான் கூறுவோம். என்னுடைய கால் சரியில்லை என்று கூறுவதில்லை. என்னுடைய கண் சரியில்லை என்று கூறுவதில்லை. கண் வலியாக இருக்கிறது, கண் பார்வை சரியாகத் தெரியவில்லை என்றுதான் கூறுவோம். அதேபோல் என்னுடைய மனம் குழப்பத்தில் இருக்கிறது என்றுதான் குறிப்பிடுகிறோம். எனவே நமது மனம் என்பது 'நான்' அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

என்னுடைய கால் என்றுதான் குறிப்பிடுகிறோம். கால் மட்டும் நான் அல்ல. நமது உடல் உறுப்புகள் அனைத்தும் சேர்ந்து இருக்கும்போதுதான் உடல் என்று கூறுகிறோம். எனவே நான் இருக்கிறேன் என்றால் நமது உடலில் உள்ள எல்லா உறுப்புகளையும் நினைத்துதான் 'நான்' என்று கூறுகிறோம். மனிதன் எந்த ஒரு உடல் உறுப்பையும் நினைத்து நான் என்று கூறுவதில்லை. இதிலிருந்து மனிதனுடைய ஒரு உறுப்பு மட்டும் நான் அல்ல என்று தெளிவாகத் தெரிகிறது.

அறியாமை என்பதும் நான் அல்ல. என்னுடைய புத்தி சரியில்லை. என் புத்தி சரியில்லாமல் மனம் புண்படும்படி பேசி விட்டேன் என்று கூறுகிறோம். மனிதன் எல்லாப் பொருள்களைப் பற்றியும் முழுமையாக தெரிந்து கொள்ள முடிவதில்லை. அவ்வாறு ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்ளாமையை





எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

நாம் அறிந்து கொள்வதால் அறியாமையை நாம் அறிந்து கொள்கிறோம். எடுத்துக்காட்டாக ஆகாயத்துக்கு மேலே என்ன இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. அவ்வாறு ஆகாயத்துக்கு மேலே என்ன உள்ளது என்று தெரியாது என்பதைப் பற்றி நாம் அறிந்து இருக்கறோம். எனவே நமது அறியாமையை நாம் அறிந்து கொள்வதால் அறியாமை என்பதும் நான் அல்ல.

புத்திக்கும் ஞானத்திற்கும் என்ன வேறுபாடு. புத்தி என்பது பலவிதமான அறிவுகளைக் கொண்டது. ஞானம் என்பது ஒரு அறிவின் மூலம் அறிந்து கொள்வது ஆகும். மூன்று சரீரங்கள் பஞ்ச கோசங்கள் என்னுடையது என்று கூறுகிறோம். அவை நான் அல்ல என்று சாஸ்திரம் கூறுகிறது. என்னுடைய மனம் சந்தோசமாக இருக்கிறது. என்னுடைய மனதில் கோபம் இருக்கிறது. என்னுடைய மனதில் வெறுப்பு இருக்கிறது என்றுதான் கூறுகிறோம். எனவே மனம் என்பது ‘நான்’ அல்ல என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

நான் ஓடிக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறோம். உடல் ஓடிக்கொண்டு இருக்கிறது என்று யாரும் கூறுவதில்லை. எனவே உடல் என்பது நான் அல்ல. நாம் இந்த ஸ்தூல உடலை நினைத்துக்கொண்டுதான் ‘நான்’ என்று குறிப்பிடுகிறோம். என்னோட நிலம், வீடு என்று இவையெல்லாம் என்னுடையது என்று நாம் அறிந்து கொள்வதால் அவ்வாறு கூறுகிறோம். இவைகள் நான் என்பதிலிருந்து வேறுபட்டது. ஆனால் இந்தப் பொருட்கள் நான் அல்ல. பஞ்சகோசங்கள் நான் என்பதிலிருந்து வேறுபட்டது. எனவே பஞ்சகோசங்கள் என்பது ஆத்மா அல்ல.

நிகழ்காலம், இறந்த காலம் எதிர்காலம் என மூன்று காலங்களிலும் இருப்பது சத் என்பதாகும். சித் என்பது ஞான சொரூபம் ஆகும். சத் ஸ்ரூபமாக சித் ஸ்ரூபமாக ஆனந்த ஸ்ரூபமாக சேர்ந்து சச்சிதானந்தமாக எது இருக்கிறதோ அது ஆத்மா.

நான் என்ற ஒரு தத்துவம் இந்த உலகத்தில் இருக்கும் ஏதோ ஒன்றை அனுபவித்துக்கொண்டு இருப்பவன் என்பது பொருள். நான் என்பது நமது இந்திரியங்கள் மூலம் ஒரு பொருளை அனுபவிப்பதைக் குறிப்பிடுகிறது. அது உடலைக் குறிப்பது அல்ல. ஆனால் உலக வழக்கில் நான் என்ற சொல்லை நமது உடலாக எண்ணிக்கொண்டு இருக்கிறோம். நாம் நமது இந்திரியங்கள் வழியாக இந்த உலகத்தை அனுபவவித்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக ஒரு பொருளை அறிந்த பிறகுதான் அதனை அனுபவவிக்க முடியும். ஞானம் இல்லாமல் ஒரு பொருளை அறிந்து கொள்ளவோ அனுபவவிக்கவோ முடியாது.

எடுத்துக்காட்டாக ஒரு பேனாவைப் பார்க்கிறோம். பேனாவைப் பார்த்து அது பேனா என்று அறிந்த பிறகுதான் நம் அதனை எழுதுவதற்குப் பயன்படுத்துகிறோம் அல்லது பேனாவால் எழுதி அதனை அனுபவவிக்கிறோம். இங்கு கண் என்ற இந்திரியம் உதவி செய்கிறது. பொதுவாக ஒரு பொருளின் தன்மையை அறிந்து கொள்ளாமல் அப்பொருளை நாம் அனுபவிக்க முடியாது. ஒரு பொருளின் வாசனையைப் பற்றி அறிந்து கொள்ளாமல் வாசனையை அறிந்து கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவருக்கு சளி பிடித்து இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவர் நாசியின் அருகில் மணமிக்க மலரைக் கொண்டு சென்றாலும் வாசனையை அவர் அறிந்து கொள்ள முடியாது. காரணம் நாசி என்ற இந்திரியத்தின் நுகர்ந்து அறியும் தன்மைக்கு சளி தடையாக இருப்பதால் வாசனையை அறிந்து கொள்வதற்கு முடியாது. அறிந்து கொள்ள முடியாமல் இருந்தால் ஒரு பொருளை அனுபவவிக்கவும் முடியாது.

நாம் இந்த உலகத்தில் இருந்துகொண்டு உலக அறிவு இருப்பதால்தான் அதனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எடுத்துக்காட்டாக ஒருவரிடம் நீ ஜடமாக இருக்கிறாயா உணர்வு பூர்வமாக இருக்கிறாயா என்று கேட்டால் யாரும் ஜடமாக இருக்கிறேன் என்று கூற மாட்டார்கள். அதேபோல் ஜடமாக இருக்கிறேன் என்று அவர் கூற வேண்டுமானால் ஜடம் என்பது பற்றி அறிவு அவருக்கு இருந்தால்தான் ஜடமாக இருக்கிறேன் என்று கூறுவதற்கு முடியும்.

இந்த உலகத்தை ஏதோ ஒருவர் அனுபவவித்துக்கொண்டிருப்பதால் அறிவு பூர்வமாகத்தான் இருக்க வேண்டும். உலக அறிவு எதுவும் இல்லாமல் ஒருவர் இந்த உலகத்தில் காணும் பொருள்களை அனுபவவிக்க முடியாது. உலகில் காணும் பொருளைப்பற்றி அறிந்து கொள்வது அறிவுபூர்வமான தத்துவம் ‘சித்’ எனப்படும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308





# 2023 இந்த ஆண்டில் ஆன்மிக அதிசயநாட்கள்



ஆங்கில மாதத்தின் கணக்கின் படி ஒரு ஆண்டிற்கு ஒருமுறையே! ஒரு விழா வரும். ஆனால் இந்த 2023ம் ஆண்டை பொறுத்தவரை பெருமாளுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசி 2 முறை வருகிறது. அதாவது ஜனவரி 2023ல் 2ந்தேதி (திங்கட்கிழமை) அன்று வைகுண்ட ஏகாதசி வந்தது. வரும் இந்த ஆண்டின் கடைசி டிசம்பர் மாதம் 23ந்தேதி (சனிக்கிழயை) அன்றும் வைகுண்ட ஏகாதசி வருகிறது.

வைகுண்ட ஏகாதசி நாளில் பெருமாள் கோவிலில் சொக்கவாசல் திறக்கப்படுவது வழக்கம். ஒரே ஆண்டில் 2. முறை வைகுண்ட ஏகாதசி வருவதை சிறப்பானதாக பக்தர்கள் கருதுகிறார்கள்.

## ஒரே மாதத்தில் 3 பிரதோஷம்

சிவப்பெருமானுக்கு உகந்த பிரதோஷ நாளானது ஒரு மாதத்திற்கு 2 முறை மட்டும் வரும் 2023ம் கணக்கின்படி ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் 2 பிரதோவும் வருகிறது.


அழகுராஜா

ஆனால், ஜூலை மாதத்தின் மட்டும் 3 பிரதோஷங்கள் வருகின்றன. அதுவும் இதே மாதத்தில் மகாபிரதோஷம் என்று சொல்லக்கூடிய ஜூலை 1ந்தேதி மற்றும் 15ந்தேதி ஆகிய 2 நாட்களும் பிரதோஷம் வருகிறது. சனிக்கிழமை வரக்கூடிய பிரதோஷ நாளை மகாபிரதோஷம் என்பார்கள்.

ஜூலை 1ந் தேதி, 15ந்தேதி ஆகிய 2 நாட்களும் சனிக்கிழமை வருவதால் ஒரே மாதத்தில் 2 மகாபிரதோஷம் வருவதை பக்தர்கள் பெருமிதம் கொண்டுள்ளனர்.

மேலும் ஜூலை 30ந்தேதி ஞாயிறு அன்று மேலும் ஒரு பிரதோஷம் வருகிறது. 2023 ஆண்டின் கூடுதல் சிறப்பாக பிப்ரவரி மாதம் 18ந்தேதி அன்றும் சனி மகாபிரதோஷம் வருகிறது இதை பக்தர்கள் மிகசிறப்பான நாட்களாக கருதி அந்த நாட்களில் பிரசித்தி பெற்ற கோவில்களில் பிரதோஷ வழிபாடு செய்ய இந்த ஆண்டில் வரும் ஆன்மிக அற்புதமான நாட்களை எதிர் பார்த்து வருகின்றனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இணையதளம் வெளியிடும்

# பழனி முருகன் கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர்

● பாதயாத்திரை தொடங்கிய முதல் முருகன் ஸ்தலம்
● முழங்கால் வழிபோக்கும் முருகன் கோவில்,
● 12 ராசிகளுக்கான முருகன் கோவில்
● அறுபடைமுருகன் தலசிறப்பு, ● கங்கை தீர்த்தம் வழங்கும் கோவில் ● பழனி மலையில் வாழ்ந்த சித்தர்கள் மற்றும் பலநூறு ஆன்மிக தகவல்கள் அடங்கிய பொக்கிஷமாக ஆர்ட் பேப்பரில்

பல அரிய தகவல்களுடன் வெளிவருகிறது.



வியாபார அன்பர்கள்,
தொழில் நிறுவனத்தினர்
தங்கள் விளம்பரங்களுக்கும்,
ஆன்மிக அன்பர்கள்
இதழ் குறித்த தகவலை
பெறவும் தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:
Ph:9994323622 W.No:9444228203







# திருக்கழுக்குன்றத்தை காப்பாற்றும் செல்லியம்மன்

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டி லிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது புகழ்பெற்ற திருக்கழுக்குன்றம். திருக்கழுக்குன்றம் மையத்தில் உள்ள சன்னதி தெருவில் அமையப் பெற்றுள்ள பழமையான கோயில்களில் செல்லியம்மன் ஆலயமும் ஒன்றாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கோயில் இது. இந்த ஆலயம் பக்கத்தில் அமைந்துள்ள தெருவிற்கு அம்மன் பெயரிலேயே செல்லியம்மன் கோயில் தெரு என அழைத்து வருகின்றார்கள்.



கோயில் சிறப்பு:

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் நடைபெறும் சித்திரை பெருவிழா தொடங்குவதற்கு முன்பாக நகரின் காவல் தெய்வமாக விளங்கும் பிடாரி செல்லியம்மனுக்கு சித்திரை அமாவாசையிலிருந்து மூன்றாம் நாள் காப்பு கட்டி அதற்கடுத்த இரண்டு நாட்கள் உற்சவமாக சந்தி துலக்குதல், எல்லை கட்டுதல், திருக்கல்யாணம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும்.

சித்திரை பெருவிழா எந்த இடையூறும் இல்லாமல் நடைபெற செல்லியம்மனே நேரில் சென்று கிராமத்தில் உள்ள துர்சக்திகளை விரட்டுவதாகவும், அஷ்டதிக் பாலகர்கள் உறையும் நவசந்திகளை திறந்து தடிகார்,பொலிகார் என்பவர்கள் மூலம் பலி (உணவும், நீரும்) கொடுக்கப்படுவதை எல்லை கட்டுதல் என கூறப்படும்.





புராணக்கதை:

கற்கால ஆதி மனிதர்கள் குழுவாக வசிக்க தொடங்கியவர்கள் பெரும்பாலும் தாய்வழி சமூகமாகவே இருந்தனர். ஒவ்வொரு இனக் குழுவிலும் வயதில் மூத்த பெண்ணே தலைவியாக இருந்து தம் குழுவை , ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்து, வழிநடத்தும் பொறுப்பை ஏற்றிருந் தாள். அப்படி அவள் மறையும் பொழுது அவளை "தாய் தெய்வமாக"அவளுடைய சந்ததியினர் வழிபட தொடங்குகின்றனர்.

காலங்கள் உருண்டோடுகிறது மனித நாகரிகம் வளர தாய் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக தமிழர் தம் ஐவகை நிலங்களில் பாலை நிலத்துக்குரிய கடவுளாக "கொற்றவை" எனும் பெண் தெய்வம் வழிபடப்படுகிறாள். இவள் போர்களில் வெற்றியை தரும் தெய்வமாக இருந்திருக்கிறாள்.

மன்னர்கள் எதிரிநாட்டு மன்னர்களுடன் போர் தொடுப்பதற்கு முன்னர் போரில் வெற்றியடைய கொற்றவையை வழிபட்டு, தங்கள் வீரர்களில் தாமாக முன்வந்து தன் தலையை தானே அரிந்து பலி கொடுக்கும் அரிகண்டமும், உடலில் உள்ள ஒன்பது உறுப்புகள் அறுத்து பலி கொடுக்கும் நவகண்டமும் கொற்றவைக்கு பலியாக தந்தனர். அப்படி அரிகண்டம்/ நவகண்டம் கொடுத்தவர்களின் நினைவை போற்றும் விதமாக மன்னர்கள் அவர்களுக்காக நடுகற்களும் அதில் கல்வெட்டுகளையும் வெட்டி யுள்ளனர்.

இப்படியாக தாய் தெய்வ வழிபாடு மற்றும் கொற்றவை வழிபாட்டின் தொடர்ச்சியாக கிராமங்களில் கிராம தேவதையான பிடாரி வழிபாடு வந்திருக்கிறது. அக்காலத்தில் தமிழகத்திற்கு பெரும்பாலான ஆபத்துக்கள் (அதாவது பிற பகுதி மன்னர்களின் படையெடுப் புகள்) வடக்கு திசையில் இருந்தே வந்திருக்கிறது. அதனாலே இன்றும் பார்த்தோமேயானால் பெரும்பாலான ஊர்களில் பிடாரி கோயில் வடதிசை பார்த்தவாறே அமைக்கப்பட்டிருக்கும். திருக்கழுக்குன்றத்திலும் அமையப்பெற்றுள்ள இந்த ஆலயம் வடக்குதிசை பார்த்தவாறு அமைந்துள்ளது.

வரக்கூடிய ஆபத்துக்களில் இருந்து மக் களை காத்து இரட்சிக்கக்கூடியவளாக பிடாரி விளங்குகிறாள். அப்படி மக்களை காக்கும் அன்னைக்கு மக்கள் விழாக்கள் எடுபித்தும், பலிகள் (ஆடு, கோழிகள் பலி) கொடுத்தும் அவளை மகிழ்விக்கின்றனர். பெரும்பாலான கிராமங்களில் இன்றும் இவ்வழக்கம் உண்டு.

சரி வரலாற்றிலிருந்து செல்லியம்மன் கோயி லுக்கு வருவோம். திருக்கழுக்குன்றம் சன்னதி தெருவில் வடதிசை நோக்கி அமைந்துள்ள ஆலயத்தில் உள்ளே சென்று பார்த்தோமேயானால் கருவறையில் பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி வரிசையாக சப்தமாதர்களும், இவர்களோடு விநாயகர் மற்றும் வீரபத்திரரும் இருபுறமும் வீற்றிப்பர்.

செல்லியம்மன் கோயில்னு சொல்லிட்டு உள்ளே சப்தமாதர்கள் இருக்காங்களேன்னு





கேட்கலாம்.

சிவலாயங்களில் உள்ள பரிவார மூர்த்தங்களில் சப்தமாதர்களை பிரதிஷ்டை செய்து வழிபடவும் ஆகமங்கள் கூறுகிறது. பெரும்பாலான கோயில்களில் சுற்றுப்பிரகாரத்தில் இவர்கள் வழிப்படப்படுவதை இன்றும் காணலாம்.

மேலும் மன்னர்கள் காலத்தில் ஆகம சாஸ்திரப்படி நகரை நிர்மாணம் செய்வதை "நுண்கயிறிடல் அல்லது வாஸ்து பத விந்யாஸம்" எனக் கூறுவர். அப்படி நகர நிர்மாணத்தில் ஊரில் உள்ள சிவாலயம் அல்லாமல் "மாத்ரு ஸ்தானம்" எனுமிடத்தில் தனியாக சப்த மாதர்களுக்கு கோயில் எடுப்பித்து வழிபாடு செய்ய ஆகமம் வழிவகுக்கிறது. அப்படி தான் திருக்கழுக்குன்றத்திலும் சப்தமாதர்களுக்கென ஊரினுடய மாத்ரு ஸ்தானத்தில் தனிக்கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும்.

சப்தமாதர் சிற்ப அமைப்பை நோக்கும் போது அவை சோழர் காலத்தை சார்ந்தவையாக தெரிகிறது. எனவே சோழர் காலந் தொட்டே இக்கோயில் வழிப்பாட்டில் இருந்திருக்க வேண்டும், காலப் போக்கில் சப்தமாதர் வழிபாடு பிடாரி வழிபாடாக மாறியுள்ளது. (பெரும்பாலான ஊர்களில் செல்லி யம்மன் கோயில் என இருந் தால் உள்ளே சப்த மாதர்களே மூலவராக பார்க்கலாம்) செல்லியம்மன் எனும் பெயரில் அன்னையர் எழுவரும் திருக் கழுக்குன்றத்தின் கிராம தேவதையாக வீற்றி ருந்து நம்மையெல்லாம் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.


வேலன்

ஆலய திருவிழாக்கள்:

செவ்வாய், வெள்ளி, ஞாயிறுக்கிழமைகளில் பக்தர்கள் வருகை அதிகமாக இருக்கும். சித்திரை மாதம் வருகின்ற அமாவாசை கழித்த மூன்றாம் நாளிலிருந்து மூன்று நாட்க ளுக்கு இரவில் விஷேஷமாக இருக்கும். ஆடிமாதம் முழுவதும் பக்தர்கள் வருகை அதிகமாக இருக்கும்.

புரட்டாசி மாதம் நடைபெறுகின்ற நவராத்திரி யின் போது அம்மன் விதவிதமான அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். நிறைய பேருக்கு இந்த அம்மன் குலதெய்வமாக உள்ளதால் காதுகுத்துதல்,பொங்கல் வைத்தல் திருமணம் செய்து கொள்ளுதல்இங்கு நடைபெறுகின்றது.

ஆலய நேரம்:

தினசரி காலை 6.00 மணியி லிருந்து மதியம் 1.00 மணி வரையி லும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும ஆலயம் திறந்திருக்கும்.

ஆலய பூஜாரி தொடர்பு என்: 9788684951

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# கலாச்சாரமும் ஒழுக்கமும் நாட்டை ஆகாயத்தின் அளவிற்கு உயர்த்தி விடுகிறது

உலகில் எந்த எந்த நாடுகள் இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளன என்று தாங்கள் பட்டியல் போட முடியுமா? முடியவே முடியாது. நீங்கள் கட்டாயம் என்னை இப்படிப்பட்ட கேள்வி கேட்டு அநாவசியமாக நான் சுமக்க வேண்டாத எனது சிலுவையை என்னையே சுமக்கும்படியாக செய்யாதீர்கள். ஏற்கனவே பல மனிதர்கள் இத்தகைய கொள்கைகளை அவர்களே கிளப்பி விட்டு அதன் துன்பமென்னும் சிலுவையை அவர்களின் கடின உழைப்பாலேயே சுமக்கிறார்கள். இப்படித்தான் இனக்கொள்கைக்கு போராட்டம் நடத்துகிறார்கள். இது எனது பணிவான அபிப்ராயம்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

❖ ❖ ❖

மொழி எந்த வண்ணம் ஒவ்வொரு மனிதனும் தனக்கு சமமானவன் என்றும், இவன் நமக்கு சமமே இல்லாதவன் என்றும் பிரித்துக் காட்டுகிறது. நான் சொல்லுவது என்ன என்றால் இவ்விடத்தில் எந்தவிதமான தொந்தரவுகளும் உண்டாவதே இல்லை. அரசியலிலும் சரி. இனமான பிரச்சனை வர்க்க மொழி போராட்டங்களிலும் சரி மனிதனுக்கு தொல்லைகளை கொடுப்பது தனது பிறப்பு தேகம் அனைத்தையும் அவன் தனது போராட்ட கருத்துகளுடன் வைத்து திண்டாடுகிறான். எதையும் கௌரவப் பிரச்சனை ஆக்கி விடுகிறான். சிந்தனைக்கு துன்பங்களெல்லாம் இதுவே காரணம்.

❖ ❖ ❖

நீங்கள் எத்தகைய விளக்கங்களை அழகாக தந்தாலும் உலகில் இன, மான, மொழி, வர்க்கப் போராட்டங்கள் உலகில் சவாலாகவே விளங்கி கொண்டிருக்கிறது. அதையோ அல்லது அதனால் வரும் துன்பத்தையோ நீங்கள் எப்படி போக்கப் போகிறீர்கள்? எவர் இதற்கு முடிவான முழுமையான முடிவு எடுக்கிறார்களோ அம்முடிவை முதலில் நான் ஆதரிக்க இருக்கிறேன். எப்பக்கத்து கட்சியினர் ஆயினும் மாறுபட்டவர்கள் நல்ல முடிவை எடுத்தாலும் அதையும் நான் ஆதரிப்பேன். இப்பிரச்சனைகளுக்கு உரிய இருதரப்பாரும் உடனடியாக அமைதியைப் பெறுகிறார்கள் என்றால் அது எவர்க்கும் ஒப்புதலானதே. இவ்வண்ணம் செயல்பட வேண்டும் என்பதுதான் உலகிலுள்ள தெளிவாளர்களின் கொள்கை.

❖ ❖ ❖

கீழ்வருவனவற்றில் எது மிகவும் உயர்த்தியானது? மொழியா, இன, மானப்பிரச்சனையா, வர்க்கங்களின் நிறைவா, தேச கலாச்சாரமா, மக்களின் பழக்க வழக்கங்களா? எது நல்லது எவை எவை மேற்சொன்ன கருத்துக்களுக்கு ஆதரவாக இருந்து குழப்பத்தை விளைவிக்கிறது? மொத்தத்தில் எது சிகரமான கருத்து? சொல்கிறேன் கேளுங்கள். கலாச்சாரமும் ஒழுக்கமும் நாட்டை ஆகாயத்தின் அளவிற்கு உயர்த்தி விடுகிறது. எங்கும் மொழி ஒன்றே தொல்லையைக் கொடுக்கிறது. இதுவே எனது முடிவான கருத்து.

❖ ❖ ❖



மதம் என்றால் என்ன? கடவுள் இருக்கிறான் என்ற நம்பிக் கையை வலியுறுத்துகின்ற கருத்தே அது. உலகில் எப்பொழுதும் நிரந்தரமாய் இருக்கின்ற அக்கருத்து மனித ஆற்றலைக் காட்டிலும் பெரிய ஆற்றலைக் கொண்டது. அதுவே தனது பெரிய ஆற்றலை வைத்து




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


கொண்டு உலகில் உள்ள உயிர்களை நிரந்தரமாய் அற்புதமாய் ஆட்சி செய்கிறது. அதனால் உயிரும் உணர்ச்சியும் உள்ள சமுதாயம் அந்த சக்தியை நினைக்க வேண்டும், தொழ வேண்டும் என்று சொல்லுவதே மதம்.

❖ ❖ ❖

உலகிற்கு இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கின்றனவா? கடவுள் என்பது ஒரு தனிப்பொருளா? அதாவது பரம்பொருளா? அல்லது அசைக்க முடியாத ஒரு பெரிய கொள்கையா? கடவுளை இத்தகைய கொள்கையாக உற்பத்தி செய்தது அல்லது செய்து காட்டியது உலகிலுள்ள மேல்நிலை சிந்தனை வர்க்கமா? இல்லை என்றால் இச்சிந்தனையைச் செய்த சிந்தனையாளர்களே கடவுளா? இதைத்தவிர வேறு ஏதாவது விளக்கங்கள் உண்டா? முதலில் இதைக் கேட்டுக் கொள். மனிதனை மேலும் மேலும் மறுபடியும் மறுபடி யும் சிந்திக்க வைக்கும் முதலில் வரும் கொள்கையே கடவுள். உதாரணம் யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே, இதுபோல எனலாம்.

❖ ❖ ❖

தாங்கள் சொல்வதுதான் நிலை என்றால் பரம்பொருள் என்ற ஒரு பொருள் உருவானதை விளக்குவதற்கு ஒரு உறுதியான மூலவிளக்க அறிவுநூல்கள் இருக்குமே அல்லது அறிவு இருக்குமே. இவ்வண்ணம் உண்மையை உணர ஒரு மூலஅறிவு இருக்குமே. ஆனால் உலகமும் அங்குள்ள பல மதங்களும் மாறுபட்ட விதவிதமான ஆயிரம் தத்துவநூல்களை உருவாக்குவானேன் தத்துவநூல்கள் வித்தியாசப்படுவதின் நோக்கம் என்ன என்பதே என் கேள்வி.

❖ ❖ ❖

கடவுளைப் பற்றிய பல எண்ணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிற்சில பிரபஞ்சத்தில் உள்ள கண்பார்வைக்கு எட்டக்கூடிய பஞ்சபூதங்களையே கடவுள் என்று சொல்லுகின்றன. வேறு சில அப்படி சொல்லவில்லை. உலகையே ஆட்டிப்படைக்கின்ற பஞ்சபூதங்கள் வெளிப்படுத்துகின்ற சக்திதான் கடவுள் என்றும் சொல்லாமல் இருக்கின்றன. இவ்வண்ணம் உலகில் கடவுளும் கடவுளின் தத்துவமும் திண்டாடுகின்றது. அதனால் பல தத்துவ நூல்கள் தோன்றின.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# ஆன்மிகமலர்
மெயில் புக்




## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# நொய்டாவில் கொண்டாடப்பட்ட அனுமன் ஜெயந்தி ஐயப்பன் பூஜை










ஸ்ரீ அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு, நொய்டாவின் வேதப் பிரச்சார் சன்ஸ்தான் நிர்வாகம் சார்பில், நொய்டா, செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில் வளாகத்தில், அமைந்துள்ள ஸ்ரீ சாந்த ஆஞ்சநேயருக்கு காலையில் சிறப்பு அபிஷேகம் ஏற்பாடு நடைபெற்றது.

அங்கிருந்த பக்தர்கள் ஸ்ரீ அனுமனை போற்றி பல்வேறு பக்தி பாடல்களை பாடினர். மாலையில் வடைமாலை சாற்றி, ஸ்ரீ சாந்த ஆஞ்சநேயருக்கு வெண்ணை சாத்தப்பட்டது.

மேலும், ஸ்ரீ ஹனுமான் சாலீசா பாராயணமும் நடந்தது. மகா தீபாராதனையுடன் அனுமன் ஜெயந்தி நிறைவுபெற்று, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அனைத்து பூஜைகளும் அபிஷேகங்களும் கோயில் அர்ச்சகர்கள் ஸ்ரீ மணிகண்டன் சர்மா, மோஹித் சர்மா சிறப்பாக செய்தனர்.

● ● ●

'35வது ஆண்டு' சாஸ்தாப்ரீதி, நொய்டா செக் 62 அமைந்துள்ள விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் சிறப்பாக நடைபெற் றது.

35வது ஆண்டு சாஸ்தாபிரீதி விழாவை யொட்டி, ரேணுகா ராமசேஷன், மீனா பிரேமா னந்த், பிரியா ராஜு அய்யர், நீலா ராஜேந்திரன், பார்கவி சுவாமிநாதன், காயத்ரி விஸ்வநாதன் உள்ளிட்ட பெண்கள் குழுவினர், ஸ்ரீ ஐயப்பனின் தத்பரியங்களில் வில்லுப்பாட்டு நடத்தினர். மேலும், கோவில் நிர்வாகத்தினர், வி.எஸ். எஸ் பஜனை மண்டலி, வி.விஸ்வநாதன் மற்றும் குழுவினரின் ஸ்ரீ ஐயப்ப பஜனைகளை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியை வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் (VPS) ஏற்பாடு செய்தது, செக்டார் 62, நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், நடைபெற்றது.

காலையில் வேதமந்திரம் முழங்க, கணபதி ஹோமம், ஐயப்ப சஹஸ்ரநாம பூஜை, ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் ஆகியவற்றுடன்



நிகழ்ச்சி தொடங்கியது. VPS இன் மூத்த உறுப்பினர் ராஜு ஐயர் பார்வையாளர்களை வரவேற்று, 'வில்லுப்பாட்டு' நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்தினார்.

ராமசேஷன், அனைத்து கலைஞர்களையும் கவுரவித்தார், VPS உறுப்பினர்கள் ஸ்ரீதர் ஐயர், ஜெகதீசன், ராதாகிருஷ்ணன், அர்ஜுன் மற்றும் ஆர்.எஸ்.நாராயணன் ஆகியோரின் உதவியால், பூஜை பந்தலை அலங்கரித்தனர். விபிஎஸ் ஆஸ்தான வாத்தியார் பிரம்மஸ்ரீ ஸ்ரீராம், கோவிலின் வாத்தியார் மணிகண்டன் சர்மா மற்றும் மோகித் சர்மா ஆகியோர் அனைத்து பூஜைகளையும் செய்தனர்.



எஸ்.வெங்கடேசன்

இதையொட்டி, பூஜை பந்தல் அமைக்கப்பட்டு, ஐயப்பன் உருவப்படம் பல்வேறு மலர்களால் அலங்கரிக்கப்பட்டது.

ஐநூறுக்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர், கடும் குளிர் சமயத்திலும் பக்தர்கள் பெருந்திரளாக, பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர்.

மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்து, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370









பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# இறைவனை அடைய உதவும் பற்றற்ற நிலை...

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும், மனித வாழ்க்கையிலிருந்து அடுத்த நிலைக்கு செல்ல அவசியம் முயற்சி செய்யவேண்டும். சாதாரண மனித வாழ்வில், மாயை என்றதிரை மறைக்கப்படுவதால், ஆன்மிக உலகின் முதல் அடி எடுத்து வைக்க திணறுகிறோம்.

ஆன்மிகத்தில் உண்மையாக முதல் அடியெடுத்து வைத்தவன் தனது மனநிலையில் பற்றற்ற பாறாங்கல்லைப் போன்றுதான் இருப்பான், இது போன்றவர்களுக்கு மழையும் தெரியாது, வெயிலும் தெரியாது. இப்படிபட்டவர்களுக்கு பனி பெரும் பொருட்டாகவே இருக்காது.

**மனதை திறப்போம் மாயையை அழிப்போம்**

உடல் அளவில் நாம் இதை பார்க்கக் கூடாது, மனதளவில்மட்டுமே இந்த நிலையில் இருப்பவர்களை உணர வேண்டும்.

அதைப் போன்றுதான் உண்மையான ஞானிகள் நம்மைச் சுற்றி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், ஆனால், இவர்தான் ஞானி என்று நமக்கு தெரிவதில்லை. காரணம் மாயையின் பிடியில் உழல்வதால் உண்மை மறைக்கப்படுகிறது.

இதைவிட கொடுமை என்னவென்றால் உண்மையானசித்தர்களை சாதாரண மனிதனால் நெருங்கக்கூட முடியாமல் போய்விடுகிறது.

இந்த இடத்தில் சாதாரண மனிதன் என்பவன் யார் என்று பார்க்க வேண்டும், தன்னைத் தவிர மற்ற அனைத்தும் தாழ்ந்தது என்று நினைப்பவர்கள் அனைவரும் சாதாரண மனிதர்களே. உடுத்தும் உடைக்கும், அலங்காரத்திற்கும், வசதி வாய்ப்பு, பதவி இவற்றிற்கு மட்டுமே மதிப்பு கொடுக்கும் விட்டில் பூச்சி வாழ்க்கை வாழ்பவர்கள் அனைவரும் சாதாரண மனிதர்கள்.

இந்த சாதாரண மனித நிலையிலிருந்து சற்று மாற நினைக்க வேண்டும். இதற்கு கை கொடுப்பது தியானம், யோகம், பூஜை, அபிஷேகம் ஆராதனை போன்றவை.

இவை எளிதாக சித்திக்க வேண்டுமென்றால், நமது வாழ்க்கையில் நடக்கும் அனைத்திற்கும் ஒரு காரண காரியம் உள்ளது என்பதை நம்பிக்கையாகக் கொண்டு வாழ வேண்டும்.



ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் இந்த நிகழ்வு நமது வாழ்க்கையில் நடைபெற்றது என்பதை மனதிற்கு புரிய வைக்க வேண்டும். இது மிகவும் எளிது.எந்த நிலையிலும், எந்த நிகழ்வாக இருந்தாலும் இதற்கு காரணம் உள்ளது என்று மனதளவில் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டே இருந்தால் மனம் அந்த நிலைக்கு மாறிவிடும்.

அதன்பின் நடைபெறும் அனைத்து நிகழ்வையும், காரணத்துடன் மனம் பார்க்க ஆரம்பித்து விடும்.

அதே சமயம் மன நிலையிலும், பல்வேறு நிலைகள் உள்ளதை அறியவேண்டும். என்னதான் ஆன்மிக வாழ்க்கையில் நுழைந்தாலும் பரிபூரண ஆன்மிகவாதியாக மாற பல்வேறு நிலைகளை கடந்திருக்கவேண்டும்.

இந்த நிலையில்தான் நாம் இருக்கிறோம் என்று யாராலும் அறுதியிட்டு கூற முடியாது. ஏன் என்றால் ஆன்மிக நிலைக்கு அளவுகோல் என்பது கிடையாது.

100 கிலோ மீட்டரை கடக்க வேண்டுமென்றால், மில்லிமீட்டர், சென்டிமீட்டர், இன்ச், அடி, கிலோ மீட்டர் என்று தொடர்ந்து கடக்க வேண்டும், அப்படி கடந்தால்தான் 100 கிலோ மீட்டரை பூர்த்தி செய்ய முடியும்.

அதுபோன்றுதான் ஆன்மிக நிலைக்கு செல்ல பல்வேறு நிலைகளை கடக்கவேண்டும், அப்படி கடந்தால்தான் பரிபூரண ஆன்மிக நிலையில் முதல் படியையே அடைய முடியும். இந்த நிலையில் நாம் கடக்கும்போது, நமது சொந்தம் பந்தங்களையும் ஆன்மிக பாதையில் இழுத்து வரவேண்டும் என்று நினைத்து செயல்படுவதை முதலில் விட்டுவிட வேண்டும்.

ஏன் என்றால் கட்டாயப்படுத்தி அவர்களை ஆன்மிக பாதைக்கு அழைத்து செல்லும் போது அவர்களின் ஆன்மிக பயண நிலை எந்த நிலையில் இருக்கும் என்பது நமக்கு தெரியாது.

உதாரணமாக ஒரு சிறு கதையை பார்ப்போம்...

கடவுளின் தரிசனம் வேண்டி ஒருவன் பல காலம் தவம் இருந்தான், அவனின் தவத்திற்குகட்டுப்பட்ட இறைவன் அவனுக்கு தரிசனம் தந்தார்.

மகிழ்ச்சி அடைந்தவன் கடவுளிடம் ஒரு வரத்தை கேட்டான்.

“தங்கள் தரிசனத்தை நான் மட்டும் பார்த்தால் போதாது, என் ஊரில் உள்ள மக்களுக்கும் நீங்கள் காட்சி அளிக்கவேண்டும்.” என்று தனது கோரிக்கையை இறைவன் முன் வைத்தான்.

இறைவன் சிரித்துக் கொண்டே... “மனதாலும், உடலாலும், நம்பிக்கை உள்ள மனிதர்களால் மட்டுமே இறைவனை காண முடியும், நீ கூறும் மக்களுக்கு தகுதி இருந்தால் அவர்களுக்கு காட்சி கிடைக்கும்” என்றார்.

பக்தன் இன்னும் பக்குவமடையவில்லை என்பதை உணர்ந்த இறைவன், பக்தனின் மனம் நோகக் கூடாது என்பதால்

"அடுத்த பௌர்ணமி அன்று அதோ தெரிகின்றதே ஒரு உயர்ந்த மலை அங்கே இறைவனை தரிசிக்க நினைக்கும் அனைவரையும் அழைத்துக் கொண்டு வா... நான் காட்சி தருகின்றேன்" என்று சொல்லி மறைந்தார்...

பக்தன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான், தனது ஊருக்கு சென்று, மன்னனிடமும், மக்களிடமும் இறைவனை காண பௌர்ணமியன்று அழைத்து செல்வதாக கூறினான், ஊர் முழுவதும் தண்டோரா போட்டு மிகப் பெரிய அளவில் மக்களுக்கு அழைப்பு விடுத்தான்.

அவன் குறிப்பிட்ட நாளும் வந்தது.

அனைவரும் கடவுளை காணும் ஆவலில் மலையேற துவங்கினர்...

சிறிது உயரம் சென்றவுடன்.. அங்கே செம்பு பாறைகள் தென்பட்டன...

மக்களில் நிறைய பேர், செம்பு பாறையை கண்டு அதிசயித்து நின்றனர், கிடைத்த செம்பு கட்டிகளை எடுத்து மடியில் கட்டிக்கொண்டும், சிறு சிறு பாறைகளாக உடைத்து தலையில் வைத்துக் கொண்டு கிடைத்த வரை லாபம் என்ற நோக்கில் தங்கள் ஊரை நோக்கி செல்ல ஆரம்பித்தனர்.

பக்தன் மனம் வருத்தம் அடைந்து, “நான் கடவுளின் தரிசனத்தையே காட்டுகிறேன். இவை அனைத்தும் இறைவனைவிட உயர்ந்தது கிடையாது” என்று கூறியும், ஒரு கூட்டத்தினர் செவி சாய்க்காமல் செம்பு பாறையை வெட்டி எடுத்து செல்வதிலேயே குறியாக இருந்தனர்.

மனம் வருந்திய பக்தன் மற்றவர்களை பார்த்து, “இவர்களுக்கு கடவுளின் மதிப்பு தெரியவில்லை, சரி வாருங்கள் நாம் அனைவரும் கடவுளை பார்க்க செல்லலாம்” என்று மற்றவர்களை அழைத்து சென்றான்.

அடுத்த சிறிது தூரத்தில் வெள்ளியிலான பாறைகளும்... வெள்ளி துண்டுகளும் நிறைய இருந்தன. அதை பார்த்த கூட்டத்தில் ஒருசிலர் ஓடிச்சென்று மூட்டை கட்ட ஆரம்பித்தனர்.

“இறைவனை காண வாருங்கள் இறைவன் முன் இவை அனைத்தும் ஒன்றுமே இல்லை” என்று பக்தன் மீண்டும் கழுதை கத்தாக கத்தியும் பலன் இல்லை.

மீண்டும் ஒருமுறை பக்தன் மனம் நொந்து, “உங்கள் தலையெழுத்து” என்று கூறி மற்றவர்களுடன் மலையேற ஆரம்பித்தான்.

இப்பொழுது சிறிதுதொலைவில் தங்கமலை

தென்பட்டது, அவ்வளவுதான், பக்தனை தள்ளிக் கொண்டு ஒருசில கூட்டம் ஒன்று கூடி தங்க மலையை பிரித்து மேய ஆரம்பித்துவிட்டார்கள்.

செம்பு, வெள்ளி, தங்கத்தை பார்த்தும், மனம் தளராத ஒருசிலர் இறைவனை காண பக்தன் பின் இருந்தார்கள். இவர்களைப் பார்த்து மகிழ்ந்த பக்தன்,

சரி வாருங்கள்.. செல்வோம் என்று தன்னுடன் இருந்த மற்றவர்களை அழைத்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தான். சிறிது தூரம் கடந்தான், இறைவன் சுட்டிக்காட்டிய மலை வருவதற்கு இன்னும் சில மணித்துளிகளே இருந்தது.

ஆனால் அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது, பாதை முழுவதும் சிறு சிறு குன்றுகளாக வைரங்கள் சிதறி காணப்பட்டது.

பக்தனைத் தொடர்ந்து வந்த மற்ற அனைவரும் வைரத்தை பார்த்ததும், ஓடிச் சென்று, வைரத்தை சேகரிக்க ஆரம்பித்து விட்டனர்.

சில அடி தூரத்தை கடந்தால் இறைவனை கண்டிருக்கலாம், இவர்கள் இப்படி வைரத்தின் பின் சென்று விட்டனரே என்று மனம் நொந்து வருந்தினான் பக்தன்.

மன விரக்தியுடன்...

மலையின் உச்சியில் தன்னந்தனியாக போய் இறைவன் முன் நின்றான்.

கடவுள் பக்தன் முன் தோன்றினார். "என் தரிசனத்தை காண ஊர்மக்களை அழைத்து வருவதாக கூறினாயே எங்கே மக்களை காண வில்லை?" என்றார்.

பக்தன் தலை குனிந்தவனாக "அவர்களின் மனம் இன்னும் பக்குவத்திற்கு வரவில்லை, எவ்வளவு கூறியும், செம்பு, வெள்ளி, தங்கம், வைரம் மட்டுமே அவர்களின் கண்களுக்க பெரிதாக தெரிந்தது, இறைவனான தாங்கள் அவர்களின் மனதில் இன்னும் தொலைவில்தான் இருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.. என்னை மன்னியுங்கள்" என்றான்.

இறைவனை அடையும் தூரம் குறைவாக இருந்தாலும், மாயை என்ற வலையில் மனித மனம் எளிதாக சிக்கி சின்னாபின்னமாகிவிடுகிறது என்பதையே இக்கதை உணர்த்துகிறது.

இறைவன் இங்குதான் உள்ளான், என்று தான் கண்ட அனுபவத்தை பக்தன் கூறியும், மனித மனங்களில் ஒருசில செம்பை பார்த்ததும் பின்சென்றுவிடுவதும், இன்னும் நம்பிக்கையுடன் செல்லும் இன்னும் சில மனங்கள் வெள்ளியை



பார்த்ததும் பின்வாங்குவதும், தன்னை அடக்கி அதித நம்பிக்கையுடன் செல்லும் மனம் தங்கத்தை பார்த்ததும் வாயடைத்து போவதையும், சில அடி தூரம் சென்றால் இறைவனை காணலாம் என்ற வைராக்கியத்துடன் செல்லும் மனம், வைரத்தை பார்த்ததும், வைராக்கியத்தை விட்டுவிடுகிறது.

இறைவனை காணவும் இறைநிலை அடைய வும் முதலில் நாம் பற்றற்ற நிலையை அடையவே முயற்சி செய்ய வேண்டும் என்ற உண்மையை கூறுகிறது.

மனிதப் பிறவி என்பது, ஒவ்வொரு ஆத்மாவும் கடைத்தேற்ற இறைவனால் வழங்கப்பட்ட சிறப்பு சலுகை, இந்த சலுகையை சரியாக பயன்படுத்திக் கொண்டால் இறை நிலையுடன் ஒன்றினையலாம், ஆனால் இதைப் புரிந்து கொள்ளாத ஒவ்வொரு மனித பிறவியும், பாசம், பந்தம், சொந்தம், பணம், வசதி வாய்ப்பு கேளிக்கை என்று பல்வேறு மாயத் திரையில் உழல்கிறது. இதை கடந்து எவன் ஒருவன் பற்றற்ற நிலைக்கு செல்கிறானோ அவனே இறை நிலைக்கு செல்லும் முயற்சியில் முதல் படியேறுகிறான் என்று அர்த்தம்.

– பாதையை தேடி...

போன்: 9444228203

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப சந்தா

UPI மற்றும் வங்கி
வாயிலாகவும்
சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**